நவமணி.

உள்நாடு ரூ௨ 1

வெளிநாடு ரூ௨ 1½

எல்லாம் தெய்வச் செயல்



ஆசிரியன் சி. ரா. ம இராமநாதன்

NAVAMANI.

(A High Class Tamil monthly)

PALLATUR, RAMNAD Dt. S. INDIA.

Vol. 2. பிரமோதூத-ஞு பங்குனி-மீ No 3.

பொருளடக்கம்.

எண்.	விஷயம்.	பக்கம்.
1.	கடவுள் வணக்கம்	81
2.	இறங்கற்பா:—பண்டிதர், அ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள்	82
3.	காந்தி—இர்வின் ஒப்பந்தம். (தலையங்கம்) பத்திராதிபர்.	83
4.	பைந்தமிழுக்குப் பெருந்தொண்டுபுரிந்த பன்னிரு செல்வர்கள்:—பார்க்கடலோன் தொகுத்தது.	89
5.	நட்பு:—திருசிரபுரம் வரகநகர், வரகவி திரு. சவரிநாதன் அவர்கள் எழுதுவது.	92
6.	மனோதைரியம்:—டர்பன் சரஸ்வதி சபைத்தலைவர் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள்.	95
7.	கம்பராமாயணக் கதிர்மணிக்கோவை:—நாரணன் நவில்வது	97
8.	பெண்:—பண்டிதை, ஸ்ரீமதி. அசலாம்பிகை அம்மாளவர்கள் எழுதுவது.	100
9.	இமயமலையும்—காந்தியும்:—கோவை திரு. N. லக்ஷ்மணசாமி அவர்கள் எழுதுவது.	102
10.	கனகவல்லி அல்லது கள்வர் கவர்ந்த கன்னிகை:-கோவை திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள்.	105
11.	தமிழ்:-திரு. பொன் வே. சோமசுந்தரன் அவர்கள் மேலப்பெருமழை.	109
12.	காங்கிரஸ் தீர்மானங்கள் (ஊழியன்)	111
13.	விகடத் துணுக்குகள்.	115
14.	மணியொளி (குறிப்பு) பத்திராதிபர்	117
15.	நாற்றிசை நடப்பு.	119

சந்தாதாருக்கு அறிவிப்பு.

வெளிநாட்டில் புதிதாய்ச் சந்தா செலுத்திய யாவருக்கும் பத்திரிகையை அனுப்புகிறோமானபோதிலும் எவருக்கேனும் பத்திரிகை கிடைக்காமலிருந்தால் அவர்கள் ரூபாய் செலுத்திப் பெற்றுள்ள ரசீது நம்பரைக் குறித்துச் சரியான விலாசந் தெரிவித்தால் உடனே பத்திரிகை அனுப்பப்படும். சிலர் ரூபாயைமட்டும் அனுப்பி விலாசம் அறிவிக்காமலிருக்கின்றனர். யாவரும் ரூபாய் அனுப்பும் பொழுதே சரியான விலாசத்துடன் கடிதமொன்றும் எழுதவேண்டுகிறோம்.

கடவுள் வணக்கம்.

தந்தன தானன தானன
தந்தன தானன தானன
தந்தன தானன தானன தனதான.

கொம்பனை யார்காது மோதிரு
கண்களி லாமோத சீதள
குங்கும பாடீர பூஷண நகமேவு
கொங்கையில் நீராவி மேல்வளா
செங்கழு நீர்மாலை சூடிய
கொண்டையி லாதார சோபையில் மருளாதே
உம்பர்கள் சாமீக மோகம
எம்பெரு மானேக மோகம
ஒண்டொடி மோகாக மோகம எனநாளும்
உன்புக ழேபாடி நானினி
அன்புட னாசார பூசைசெய்
துய்ந்திட வீணாள்ப டாதருள் புரிவாயே
பம்பர மேபோல ஆடிய
சங்கரி வேதாள நாயகி
பங்கய சீபாத நூபுரி கரசூலி
பங்கமி லாநீலி மோடிப
யங்கரி மாகாளி யோகினி
பண்டுசு ராபான சூரனொ டெதிர்போர்கண்
டெம்புதல் வாவாழி வாழியெ
னும்படி வீறான வேல்தர
என்றுமு ளானேம னோகர வயலூரா
இன்சொல்வி சாகாக்ரு பாகர
செந்திலில் வாழ்வாகி யேஅடி
யென்றனை ஈடேற வாழ்வருள் பெருமாளே.

பாரத தேசத்தின் மாபெருந் தலைவர்

பண்டிதர், மோதிலால் நேரு அவர்கள் பரமபதம் அடைந்தமைக்கு

பண்டிதர், அ. கிருஷ்ணசாமி நாயுடு பாடிய பாக்கள்.

கோச்சகக்கலிப்பா.

மேருமலை முறிந்ததுவோ! விண்ணிடிந்து வீழ்ந்ததுவோ!
ஊருகங்கை வற்றினதோ! உறுதருமம் உலர்ந்ததுவோ!
சாருமுயிர் சாய்ந்ததுவோ! தண்ணருந்தான் காய்ந்ததுவோ!
நேருமகான் பரமபதம் நேர்ந்ததுயர் என்னென்கோ! (1)

ஆண்டாண்டு தோறுமெவர் அழுதழுது புரண்டாலும்
மாண்டார் பின்வராரென்னில் மாழ்குமனம் மகிழ்வுறுதே
வேண்டி ஒருவாயன்றி மெய்யெல்லாம் வாயேயாக
நீண்டுட லாலழுதழுதாலும் நேருமன்ன நேர்குவையோ! (2)

உயிரினுக் கோர் உயரீதல் உலகிலரு மருந்தென்னில்
செயிறறு மெம்முயிரீந்தும் செய்ந்நன்றிக் கடன்கழிப்போம்
பயிறடுமெம் பண்டிதனே பாரதத்தின் மணிமுடியே!
உயிரனையாய் அரசியலில் உத்தமனே அப்பாவோ! (3)

வானந்து லண்டனுறுமா நாட்டில் முடியாமல்
ஆனந்த பவனத்தில் அமைக்கவரு சாப்புமுன்
ஆனந்த காந்தியுடன் அமர்வதெவர்? மோதிலாலே!
தானந்த மிலாத சுயதனியரசில் சாந்திகொள்க (4)

பத்தைந்து நாளிருப்பின் பாரத மாதாதுயரம்
எத்துணையும் தீர்ந்திருக்கும் ஏற்றபெரும் சுயவாட்சி
மெத்துமிக வகுத்திருப்பர் வெண்ணெய்திரளும் வேளைதனில்
மத்துடைத்த தாழியைப்போல் மன்னவனே மறைந்தனையே! (5)

கானழுத களிறழுத கடலழுத கடலினுறை
மீனழுத சங்கழுத வெளியழுத வெளியினுறை
மானழுத மரனழுத மலையழுத மலையினுறை
தேனழுத ஜவஹர்லால் சீயமழுங் குரல்போன்றே. (6)

உ

எல்லாம் தெய்வச்செயல்.

'நவமணி;'

பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே. [பாரதியார்]
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார்கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. [திருவள்ளுவர்]

மாலை 2. } பள்ளத்தூர், பிரமோதூத, பங்குனி. { மணி 3.

காந்தி—இர்வின் ஒப்பந்தம்.

இந்திய நாட்டின் புனிதமே உருவான எம்பிரான் காந்தியடிகட்கும் இந்தியர்பால் அன்பும் சமாதானத்தில் முழு நம்பிக்கையும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுங் கொண்ட நல்லார் இர்வின் பிரபுவிற்கும் தேசீய மஹா சபையின் சார்பிலும் இந்திய சர்க்காரின் சார்பிலும் பதினைந்து நாள் இராப்பகல் கலந்தாலோசித்ததன் பயனாக சென்ற மார்ச்சு மீ ௪வ ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டதென்பது உலகறிந்த விஷயம். இதுபற்றிச் சென்ற மணியில் நாம் குறிப்பிட்டபடி ஆராய்வாம். இது மஹாத்மா காந்தியடிகளின் சாத்வீக சரித்திரத்தில் இரண்டாவது ஒப்பந்தமாகும். முதலாவது ஒப்பந்தம் அன்று மஹாத்மாஜீக்கும்சமாதானபுருஷர்களில் ஒருவர் எனப்போற்றப்படும் ஸ்மட்ஸ் துரை மகனாருக்கும் தென்னாப்பிரிக்காவில் ஏற்பட்டதாகும். இன்று ஏற்பட்டுள்ளது இரண்டாவதாகும். இப்புதிய ஒப்பந்தத்தில் கர்த்தாக்களிருவரும் காட்டிய ஊக்கமும் அவர்களின் விட்டுக்கொடுக்குந் தன்மையும் சமரசத்தில் அவர்களுக்கிருந்த ஆர்வமும் பெரும்

இராஜ தந்திரமும் போற்றற்குரியனவாகும். இவ்வொப்பந்தம் ஏற்பட மத்தியில் நின்று மிகுந்த சிரமம் எடுத்துக்கொண்ட சில வட்டமேஜைப் பிரதிநிதிகளையும் மாளவியாஜீ போன்ற சமாதான புருஷர்களையும் இங்கு நாம் மறந்துவிடுதல் கூடாது.

இங்கிலேயிலேற்பட்ட ஒப்பந்தம் நன்கு பரிசிலனை செய்யப்படின் இருபெரும் வீரர்களும் எவ்வளவு தூரம் விட்டுக்கொடுக்கமுடியுமோ அவ்வளவு தூரம் விட்டுக்கொடுத்தே போயிருக்கின்றனர். இதில் வெற்றியாருக்கு? தோல்வியாருக்கு? என்ற கேள்விக்கே இடங்கிடையாது. நன்றாக சமாதான ஒப்பந்தத்தைச் சமரசநோக்குடன் பரிசிலனைசெய்வோமேயானால் வெற்றி இருவருக்குமே! இதனால் இருவர் பாலும் பாஸ்பரம் நல்லெண்ணமும் ஒருவரையொருவர் அறியுங்குணமுமேற்பட்டதென்ற பெரும் வெற்றியே சிறந்தவெற்றியாகும்.

தேசிய வீரர்கள் செய்த மாபெருங்கிளர்ச்சி எதற்கென்பதை தேசமக்கள் சற்று சிந்தித்துப் பாருங்கள்? நாம் எதைச்சொன்னாலும் பிரிட்டிஷார் அதைக்காதில் போடுவதேயில்லை. அவர்கள் நலன் ஒன்றைநாடியே வாழ்கிறார்கள். அது நீங்கிநம்மையும்சமமாக எண்ணவேண்டும். நமதுசௌகரியத்தையும்அவர்கள்நாடவேண்டும் என்பது தானே நமது வேண்டுகோள். இதைத் தானே மஹாத்மா ஜீயவர்கள் 1930 மார்ச் முதலில் மே. த. இர்வின் பிரபுவிற்கு இருதிக் கடிதமாக விடுத்தார்கள். அதை அவர் கவனியாததால், தேசத்தில் யாது நிகழ்ந்தது? அறப்போர். அறப்போர். ஓராண்டிற்குள்—1931 மார்ச்சுக்குள் அப்போர் என்ன செய்தது? அன்றிருந்த நிலைமாறி, உங்கள் வார்த்தையைக் கேட்கிறோம். உங்கள் கோரிக்கையை நிறைவேற்றுகிறோம். எங்கள் நிலையையும் சௌகரியத்தையும் அறிந்து எதையுங் கேளுங்கள் என்ற முடிவிற்கு இந்திய சர்க்காரைக் கொண்டுவந்தது என்றால்—அதன்படி ஓர் ஒப்பந்தமும் செய்யப்பட்டதென்றால், வெற்றி எவருடையது? நாம் எண்ணிய காரியத்தில் முதலில் வெற்றிபெற்றோமல்லவா? இவ்வெற்றி நமக்குக் கிடைத்தபின் ஏன் சமரசத்தோடு நாம் அவர்களுடன் கலந்து ஆலோசித்து நமது கோரிக்கையை அடையாதிருக்க வேண்டும்?

இது விஷயமாக ஒப்பந்தஞ் செய்துகொள்ளும்பொழுது இன்னும் சில ஷரத்துக்களை மஹாத்மாஜீ கடுமை செய்திருக்கலா மென்பது சிலரது அபிப்பிராயமெனத் தெரிகிறது. அது வேண்டு வதில்லை. நாம் பிடிவாதஞ் செய்வோமேயானால், அவர்களும் பிடி வாதஞ் செய்வார்கள். பின்னர் ராஜிக்கு மார்க்கமேது? அது முடியாத விஷயம். இப்பொழுது செய்துள்ள ராஜியில் தேச மக்களின் கௌரவத்தைக் காப்பாற்ற மகாத்மாஜீயும் பிரிட்டி ஷாரின் கௌரவத்தைக் காப்பாற்ற இர்வின் பிரபுவும் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சி அளவிடமுடியாத தொன்றாகும். எனவே இராஜியென்று சொன்னால் இதைவிட சிறந்ததாக இருவரு டைய நல்லெண்ணத்திலும் மற்றொன்று உதயமாகும்படி செய்ய முடியாதென்பதே நமது முழு நோக்கம். இந்த ராஜியோடு நமது அறப்போர்ச் சரிதம் முடிந்துவிடவில்லை. இப்பொழுது நாம் செய்த போரை நிறுத்தி இனி நடக்கவிருக்கும் வட்டமேஜை மஹாநாட் டில் நமது கோரிக்கையை நிலைநாட்ட நமக்கு இப்பொழுது சந் தர்ப்ப மளிக்கப்பட்டிருக்கிறது. நமது கோரிக்கையின் பூர்த்தி எவ்வளவு தூரம் ஜயத்துடன் செய்யப்படுகிறதென்பது இனி நடக்கவிருக்கும் விவாதங்களின் மூலமும் அதிலிருந்து உண்டா கும் முடிவின் மூலமுமே தெரியும். அம்முடிவுதான் வழவழ வென்றிராமல் ஆணித்தரமாகவிருக்கவேண்டுமே யொழிய இப் பொழுதைய ராஜியில் நாம் அது விஷயங்களைக்கூர்ந்து பார்க்க வேண்டுவதில்லை. இந்த ராஜி எவ்வாற்றானும் ஓர் தற்காலிகமான ராஜியே. வரப்போகும் மஹா நாட்டில் நாம் கோரியபலன் கிட் டாதுபோயின் இப்பொழுது நாம் நடத்தியதைவிட இன்னும் பன் மடங்கு அதிகமாகப் போராடி நமது கோரிக்கையை நாம் பின்னர் கைப்பற்றக்கூடாமல் இந்த ராஜி ஒன்றுஞ் செய்துவிடவில்லை. எவ் வாற்றேனும் அடக்குமுறையின் பலனாக ஜனங்களின் சுதந்தர எழுச்சியை அடக்கிவிடமுடியாது. ஒன்று அவர்களின் தேவை யைப் பூர்த்திசெய்யவேண்டும்; அல்லது அவர்களைச் சமாதானப் படுத்தியே கேட்டுக்கொள்ளவேண்டும். அங்ஙனம் செய்தாலொ ழிய அடக்குமுறை பலன்தராது என்பதற்கு இந்த ராஜியே போதிய அத்தாக்ஷியாகவிருக்கிறது.

இந்த சந்தர்ப்பத்தை விட்டு ராஜி செய்துகொள்ளாதிருப் போமேயானால் வெளி நாட்டவர் இப்பொழுது அறிய சந்தர்ப்ப

மேற்பட்டிருப்பதுபோல் நமது நல்லெண்ணத்தையும் ஆளுவோரின் தந்திரத்தையும் எடுத்துக்காட்ட வலியவந்த நல்ல சமயத்தைக் கை நழுவவிட்டவர்களாவோம். இவ்வொப்பந்தத்தின் மூலம் சுதந்தர வீரர்களுக்கும் பல வேலைகள் செய்ய இடமளிக்கப்பட்டுள்ளன. அவர்கள் அமைதியாக அந்நியத்துணி பகிஷ்கார வேலையைப் பொதுவாகச் செய்யலாம். அதில் அவர்கள் பிரிட்டிஷ் துணி பஹிஷ்காரம் என்பதை மாத்திரம் எடுத்துக்கொள்ளக்கூடாது. பொதுவாக அந்நியச் சாமான் பகிஷ்காரம்—சிறப்பாக அந்நியத்துணி பஹிஷ்காரம் என்பதை எடுத்துக்கொண்டு வேலை செய்யலாம். மதுபான மறியலை அமைதியாக நடத்தலாம். கடலோர ஏழைகள் உப்பு விஷயத்தில் சிறிது சாதகம் பெற்றுள்ளனர். அவர்கள் தேவைக்கும் தங்கள் கிராமங்களிலுள்ளவர்களுக்கு விற்பதற்கும் அவர்கள் இஷ்டம்போல் உப்பு உற்பத்தி செய்துகொள்ளலாம். இவைகளைத் தொண்டர்கள் ஜனங்களுக்கெடுத்தோதலாம். ஜனங்கள் திடசரீரம் பெற்று நல்வழிக்கு வரவும் ஏழைகள் பணங்களைக் கொள்ளை கொடுக்காது காப்பாற்றவும் ஹேதுவான மதுபான மறியலும்; இந்தியாவின் பொக்கிஷத்தைக் கொள்ளை கொள்ளக் காரணமும் இந்தியத் தொழிலாளர்கள் பிழைப்பில் மண் போடுவதுமான அந்நிய நாட்டுச் சாமான் பஹிஷ்காரமும் சாமாணியமான வேலையன்று அதைச் செய்வதற்கு இப்பொழுதுள்ள தொண்டர்கள் மட்டுமன்று; இதுபோல் இன்னும் அநேகம் லக்ஷக்கணக்கான தொண்டர்கள் தேவையிருக்கலாம். இப்பெரும் வேலையை விடாமல் தொடர்ந்து செய்ய இப்புதிய ஒப்பந்தம் இடந்தந்துள்ளதென்றால் இதிலும் சிறந்த யாதொரு ஒப்பந்தத்தை நீங்கள் காணப்போகிறீர்கள்? இன்னும் இவ்வொப்பந்தத்தை ஒப்புக்கொண்டு உங்களுக்குப் புதிய பல வழி காண்பிக்க கராச்சி காங்கிரஸ் போதிய துணை நிற்கும். அதைப் பின்பற்றி இவ்வொப்பந்தத்தை யாவரும் ஏற்று சமாதானத்தை எங்கணும் நிலவச்செய்யவேண்டுவதே இன்றியமையாததொன்றாகும்.

அடுத்தபடியாகத் தேசவீரர்கள் தங்கள் உயிரைக்கொடுத்துக் காத்த தேசீயமஹாசபையின் பெருமையை நிலைநாட்டி இந்தியாவின் சரியான பிரதிநிதித்துவம்வாய்ந்த சபை இந்தியதேசீயமஹாசபையே

என்பதை இந்திய சர்க்கார் ஒப்புக்கொள்ள சந்தர்ப்பங்கொடுத்தது இவ்வொப்பந்தமே என்றபொழுது இன்னும் நமது வெற்றி பலப்படும். இதில் பலாத்காரக்குற்றஞ் செய்தவர்களையும் விடுதலை செய்யும் விஷயம் வலியுறுத்தப்படவில்லை என்பது சிலரது விவாதம். நமது இயக்கம் அஹிம்சா இயக்கமாகையால் பலாத்காரக் குற்றஞ் செய்தவர் நமது இயக்கத்தைச் சேர்ந்தவராக இருக்கக் கூடாது. ஆயினும் தேசநலம் ஒன்றே கருதி அவர்கள் அதைச் செய்தார்கள் என்பதற்காக நாம் பரிவுகாட்டியபோதிலும் அது இவ்வொப்பந்தத்தில் வலியுறுத்தமுடியாததொன்றாய்விட்டது. அது பற்றி மகாத்மாஜீயவர்கள் அபிப்பிராயங் கூறும்பொழுது இன்னும் 6 மாதங்களில் அவர்கள் யாவரும் வெளிவந்துவிடுவர்; இல்லையாயினும் வரப்போகும் மஹா நாட்டில் அதுபற்றிக் கவனிக்கப்படும் என்று சொன்னதையே நாம் சமாதானமாகக் கொள்ளவேண்டும். சட்டத்தை மீறி நடந்த போலீஸார் மீது விசாரணை நடத்தும் விஷயமும் மேற்கூறியதுபோல் சமாதானத்திற்கு இடையூறான தொன்றாகையால் அதுவும் விட்டுக்கொடுக்கப்பட்டு தீர்க்க தரிசன முறையில் செய்துகொள்ளப்பட்ட வெற்றிகரமான இவ்வொப்பந்தத்தை நாம் மனப்பூர்வமாக வரவேற்பதோடு யாவரும் அதை ஏற்று அதன்படி நடக்கும்படியும் வேண்டிக்கொள்ளுகிறோம். இர்வின் பிரபு தனது உத்தியோக காலம் முடிந்து ஊருக்குப்போகு முன் செய்த இவ்வரிய வேலை என்றும் இந்தியர்களால் போற்றப்படும். அதுபோலவே மஹாத்மாஜீயவர்களும் இப்புதிய ஒப்பந்தத்தின் மூலம் இன்னும் அதிகமாக ஜனங்களிடம் புதிய நம்பிக்கையையும் மதிப்பையும் பெற்றுள்ளார்கள் என்பதும் மிகையாகாது. இவ்வொப்பந்தத்துடன் இந்தியர் கோரிக்கை முடிந்துவிடவில்லை என்பதும் இந்தியர் கோரிக்கை முற்றுப்பெற இவ்வொப்பந்தம் ஓர் அஸ்திவாரமென்பதும் யாவரும் நன்கறியவேண்டிய விஷயம். இவ்வொப்பந்தமாகிய அஸ்திவாரத்தின்மேல் எழுப்பப்படும் சுதந்தர மண்டபம் இந்தியாவின் பரிபூரணநம்பிக்கைக்குப்பாத்திரமானதானதொரு நன் மண்டபமாகக் கட்டிமுடிய இறைவன் கிருபை இன்றியமையாதது. அதுவும் நமக்குக் கைகூடி இந்தியர் பூரண சுயேச்சை பெற்றது கண்டுகளிப்புறுமளவும் மஹாத்மாஜீயும் மா

பெரும் ராஜதந்திரியான இர்வின் பிரபுவும் திடசரீரிகளாகவும் மேன்மேலும் வாக்கு வன்மைபெற்றவர்களாகவும் வாழவேண்டு மென்றும் இறைவனை எத்தி வணங்குகின்றோம்.

இவ்விஷயத்தில் கவர்ண்மெண்டார்கவனிக்கவேண்டுவதொன்றுண்டு. சமாதான புருஷரான மஹாத்மாஜீ சமரசத்திற்கு இணங்கி ஒப்பந்தஞ்செய்துகொண்டபோதிலும் பலாத்காரக் கைதிகள் பற்றிய விஷயமும் விசாரணையின்றிப் பல்வேறு குற்றஞ்சாட்டிச் சிறையில் வாடும் கைதிகள் விஷயமும் இதில் வற்புறுத்தப்பட வேண்டுமென்பது இந்தியர் பெரும்பான்மையோரின் விருப்பமாயினும் யாது காரணங்கொண்டோ மஹாத்மாஜீ அதைப்பற்றி வற்புறுத்தாது விட்டுக்கொடுத்துவிட்டார்கள். இங்நிலையில் கவர்ண்மெண்டார் அவ்விஷயத்தையும் காருண்யமாக விட்டுக்கொடுப்பதே அவர்களின் பெருந்தன்மையைக் காண்பிக்கும். அவ்வாறில்லாமல் அவர்களைப் பூட்டிவைப்பதாலும் வெகுஜன வேண்டுகோளைப் பல விஷயங்களிலும் புறக்கணிப்பதாலும் இவ் ராஜி விஷயத்தில் மஹாத்மாஜீயின் வார்த்தைக்குஜனங்கள்கட்டுப்பட்டுநடக்கும்எல்லையை மீறிவிடும்படி செய்துவிடுமானால் மிகச்சிரமப்பட்டுச்செய்துகொண்ட ராஜி பயனற்றுவிடும். எனவே, அவ்விஷயங்கள் இவ் ராஜியில் வற்புறுத்தப்படாதுபோயினும் கூடுமானவரை பொதுஜன வாக்கை மதித்துப் பொதுமன்னிப்புடன் இதிலுங் கவனஞ்செலுத்தும்படி கவர்ண்மெண்டாரை நாம் வேண்டிக்கொள்ளுகிறோம். சமாதானமென்பது நிலவி பொதுஜன அமைதி முற்றிலும் நிலைத்திருக்கவேண்டுமானால் பெரும்பாலும் எல்லோரையுந் திருப்திப்படுத்தும் முறையில் இருசார்பாரும் நடந்துகொள்ளவேண்டுவதே கடமை. இதில் கௌரவக்குறைவோ சிறுமையோ எவருக்கும் ஏற்பட இடமில்லை. என்று சமாதானத்திற்கு இருவரும் ஒப்புக்கொண்டனரோ அன்றே வெற்றியுந் தோல்வியும் இருவருடையதுமே. சமாதானம் நிலைபெற எப்பொழுதும் எங்கும் பெரும்பான்மையோரின் திருப்தி முற்றுப்பெறும்படி செய்யவேண்டும். இதில் இருசார்பாரும் வேண்டியனவற்றை உடனே செய்வதே நலம்.

பைந்தமிழுக்குப் பெருந் தொண்டுபுரிந்த பன்னிரு செல்வர்கள்.

பார்க்கடலோன் தொகுத்தது.

III

கச்சியப்பன் உதைபொறுத்த வரலாறு.

கல்வி, செல்வம், அன்பு, அறிவு, சாந்தம், அடக்கம், பொறுமை, ஈகை, கற்றோரை ஆதரித்தல், தமிழின் மீது ஆர்வம் ஆதிய விஷயங்களில் தலை சிறந்துவிளங்கிய பண்டைக்காலத்து வேளாண் செல்வர்களில் பெரும்புகழ் பெற விளங்கியவர் வல்லம் 'கச்சியப்பன்' என்னும் கண்ணியரே ஆவர். இவர் மற்றெல்லாவற்றிலும் பொறுமையே தமக்கு அணிகலனகக்கொண்டிருந்தார். இது அவரை மங்காத கீர்த்திக்கு உறைவிடமாக்கியதுடன் கற்றோர் நினைவிலும் குடிக்கொளச்செய்து நூல்களில் இடம்பெறவைத்தது. இத்தகைய நல்லோர் துடுக்குச் செயலுடைய புலவரொருவரால் உதைக்கப்பட்டு அங்ஙனம் உதைத்த கால் இனி நிலத்தில் தோயாமல் இருப்பதற்குத் தம்மால் சிவிகையொன்று வெகுமதியாக உதவி அதனுடன் பொன்னும் பொருளும் போதுமானபடி தந்து உபசரித்தார். அவ்வரலாறு அடியில் வருமாறு:—

செங்கற்பட்டுக்கடுத்த 'வல்லம்' என்னும் ஊரில்கல்வி செல்வம் என்னும் இருவகையிலும் சிறப்புற்று உழுவித்துண்ணும்வேளாண் மரபில் உயர்ந்த கீர்த்திபெற்று யாவர்க்கும் இனியராய் விளங்கிய காளத்தி முதலியார் புதல்வர் கச்சியப்ப முதலியாரவர்கள் சிவிகையூர்ந்து வீதிவழியாகச் சென்றுகொண்டிருந்தார். அப்பொழுது அவர் எதிரேவந்தவரும், தண்டமிழில் விரைந்து கவி பாடுவதில் வல்லாரும், அரிச்சந்திர புராணம் பாடிய ஆசிரியரும், துடுக்குத் தன்மையால் 'வீரன்' என வழங்கப்பட்டவரும், வீரகவிராயர் என்

னும் இயற்பெயருடையாருமாகிய தமிழ்ப்புலவர், தமது வருகையைக்கண்டும், பிரபு இரங்காமலும், மரியாதை செய்யாமலும் செல்வதற்குப் பொருது துடுக்குத்தன்மை மிகுந்த தமது இயற்கை குணத்தால் பெரிதுங்கோபித்துப் பிரபுவின் பல்லக்கைவழிமறித்து நிறுத்தி அவரை இரங்கச்செய்து செல்வரென்று ஒரு சிறிதும் மதியாமல் வில்லைச்செருப்பிட்ட தமது காலால் கச்சியப்பரை மார்பின் மீது உதைத்தனர். அருகிருந்தார் துணுக்குற்று அவ்வக்கிரமச் செயலுக்குப் பொருது புலவரைத் தாக்கத்துணிந்தார்கள். பொறையினையே பூஷணமாகக்கொண்ட பிரபு, அவர்களைத்தடுத்து கற்றோர்மீது கொண்டுள்ள காதலால் அதனைக்குற்றமாகக் கொள்ளாமற்பொறுத்து புலவர் உளங்களிக்குமாறு இன்னுரை புகன்று தம்மை உதைத்தகால் இனி நிலத்தில்படாமல் சிவிகையிலே இருப்பதற்கு உயரிய பல்லக்கும், பொன்னும், பொருளும் வெறுக்க நல்கி அவரை நன்கு உபசரித்தனர். சன்மானம் பெற்ற புலவர் பிரபுவின் பொறுமைக்கும், பெருந்தன்மைக்கும் மிகவியந்து,

*மண்படுமோ வெய்யிலிலே வாடுமோ புல்லரிரு
கண்படுமோ வெப்போதுங் கற்றவர்க்குப்—பண்புடனே
மெச்சியப்பா லுங்கொடுக்கும் வீறுவல்லைக் காளத்திக்
கச்சியப்ப னையுதைத்த கால். 197. (தமிழ் நாவலர் சரிதை)

என்ற வெண்பாவைப்பாடி மிகப்பாராட்டினர்.

இவ்வுண்மை பழந்தமிழ் நூலாகிய தமிழ் நாவலர் சரிதையில் கூறப்பட்டிருப்பதன்றி,

வில்லைச் செருப்பிட்ட காலா
　　லுதைத்து வியனுலகிற்
சொல்லற் கரிய புகழ்கொடுத்
　　தோன்றட்ட வீரன்றன்னற்
பல்லக்கி லேயன்றி மண்படு
　　மோவென்னும் பாடல்கொண்ட
வல்லைப் பதிகச்சி யப்பனும்
　　வாழ்தொண்டை மண்டலமே. (50)

* 'லோபர் கடை காணுமா' 'விண்கடந்து' 'புகழ்சேர்' 'காராளர்' என்பன பாடபேதம்.

என்றபடிக்காசுத் தம்பிரான் பாடியருளிய தொண்டைமண்டல சதகப்பாடலிலும் விளக்கப்பட்டிருக்கிறது. மற்றும் பிறநூல்களிலும் இச்சம்பவம் குறிக்கப்பட்டிருக்கிறது. விரிவஞ்சி அவைகளை விடுத்தாம். மேற்குறித்த வரலாற்றாலும் செய்யுட் குறிப்புகளாலும் மேற்குறித்த சம்பவம் உண்மையென்றே உறுதிப்படுகின்றது. என்னே! அக்காலத்தில் தமிழ்ப்பாஷைக்குள்ள பெருமை. அது கற்றூர்க்குள்ள செல்வாக்கு.

'இந்திய மித்திரன்.'

விளம்பரஞ் செய்வோர்க் கொரு

விசேஷச் செய்தி.

இந்தியர்களின் குடியேற்ற நாடாகிய மலாயாவில் "இந்திய மித்திரன்" என்னும் பெயருடன் பிரதி புதன்கிழமை தோறும் இரண்டாயிரத்தி ஐநூற்றி லதிகம் பிரதிகளாக வெளியாவதும், முழு மலாயாவின் எல்லாப் பாகங்களில் மட்டுமன்றி, இந்தியா, பர்மா, சிலோன், சயாம், ஜாவா, சுமத்ரா முதலிய வெளிநாடுகளிலும் விசேஷமாகப் பரவியுள்ளதும் மலாயாவிலிதற் கிணையில்லை யெனக் கொண்டாடும் கீர்த்திவாய்ந்தது மாகிய சிறந்த தமிழ்ப் பத்திரிகையில் விளம்பரஞ் செய்வோரே தமது வியாபார விருத்தியை உண்மையிற் கோருவோர்களும், உத்தேச பலனைப் பூரணமாயடையத் தக்கோருமாவார்கள். சந்தாதார்களாகச் சேருவோர்க்கும் சிந்தைகளிக்கத்தக்க செய்திகளனந்த முண்டு. வெளியூர் வருடசந்தா ரூபாய் 7—8—0 விளம்பர விகிதங்களுக்குக் கீழ்க்காணும் விலாசத்திற் கெழுதவும்.

மானேஜர்.

"இந்திய மித்திரன்."

ஈப்போ. (எப். எம். எஸ்.)

நட்பு.

திருசிரபுரம், வரகநகர், வரகவி திரு. சவரிநாதன் அவர்கள் எழுதுவது.

"உடுக்கை யிழந்தவன் கைபோலாங்கே—இடுக்கண்
களைவதா நட்பு."

இளங்கோவன் மாயாண்டி என இரண்டு சினேகர் ஒரு கலா சாலையில் வாசித்துக்கொண்டிருந்தனர். ஒருவருக்கொருவர் குணங்கள் எவ்வளவோ வேறுபட்டிருந்தும் இருவரும் நண்பர்களாயிருந்தது ஆச்சரியமாயிருந்தது. ஓர் நாள் உபாத்தியாயர் வேலையினிமித்தம் வெளியில் சென்றார். சில துஷ்டப்பிள்ளைகள் எழுந்து விளையாடும்பொழுது மாயாண்டி கரும்பலகையைத்தட்டிவிட அது திடீரென்று விழுந்து இருதுண்டானது. உடனே பையன்களெல்லாம் தத்தம் ஸ்தானத்தில் அமர்ந்துவிட்டனர். அரை முழுவதும் மவுனமடமானது. பலகை விழுந்த சத்தத்தைக்கேட்ட ஆசிரியர் விரைந்து வந்தார். அவர் கண்கள் கோவைப்பழம்போல் சிவந்தது. மீசை துடித்தது. வெகு கோபமாய் "இதைச் செய்தவன் யார் என்று கேட்டார்" ஒருவரும் தானென்று ஒப்புக்கொள்ளவில்லை. ஒவ்வொரு பையனைக் கேட்க ஆரம்பித்தார். ஒவ்வொருவராய் தானில்லை என்று சொல்லிவிட்டார்கள். மாயாண்டியின் முறை வந்தது. அவனுக்கு உண்மையை சொல்ல பயம். "நான் செய்யவில்லை" என்றான். பின்னர் இளங்கோவனின் முறைவந்தது. அவன் தரையை நோக்கியவண்ணம் மவுனமாயிருந்தான். உபாத்தியாயர் அவன் குற்றவாளியாயிருக்க மாட்டானென்றுதெரிந்தும், எல்லோருக்கும் ஒரு படிப்பினை கொடுக்கவேண்டுமென்ற கோபத்தால் அவனை எல்லோர் முன்னிலையிலும் இரண்டு டஜன் அடி கொடுத்தார்.

மாலை பள்ளிக்கூடம் முடிந்ததும் பையன்களெல்லாம் இளங்கோவனைத் தோள்மேல் தூக்கிக்கொண்டு சந்தோஷம்கொண்டாடினார்கள். மாயாண்டியை இகழ்ந்தார்கள். அன்றிரவு மாயாண்டி

இளங்கோவன் வீட்டிற்குச்சென்று தன்னை மன்னிக்கும்படிவேண்டினான். "ஒரு காலத்தில் கடவுள் கிருபையால் இக்கடனைத்தீர்ப்பேன்" என்றான். இளங்கோவன் தான் செய்த நன்மையைப் பொருட்படுத்தாமல் இருவரும் சிநேகராகவே இருந்தார்கள்.

இது நடந்து இப்போது பத்துவருடமிருக்கும். மாயாண்டி சட்டப் பரீக்ஷையில் தேறி பெரிய வக்கீலாயிருந்தான். இளங்கோவன் பட்டாளத்தில் கர்னலாய் இருந்தான். அரசருக்கும் பிரஜைகளுக்கும் நடந்த ஓர் யுத்தத்தில் மாயாண்டி ஜனங்கள் பக்கமிருந்தான். இளங்கோவன் அரசருக்காக போர்புரிந்தான். அரசர் தோல்வியடைந்து கைதியாக்கிக் கொல்லப்பட்டார். இளங்கோவன் கைதியாக்கி சிறையிடப்பட்டான். மாயாண்டியே ஓர் பெரிய நீதிபதியாக ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

தேசத் துரோகிகளான கைதிகளை விசாரிக்க ஓர் பெருங்கூட்டம் கூடியிருந்தது. ஜனங்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதி அழகாபுரியில் இருந்ததாலும் தனக்கு மற்றவேலையிருந்ததாலும் மாயாண்டியை அமராபுரியிலுள்ள கைதிகளை விசாரித்து தண்டனையிட அனுப்பியிருந்தார். ஒவ்வொரு கைதியின் பெயராய் வாசிக்கப்பட்டது. "கர்னல் இளங்கோவன்" என்ற பெயரைக் கேட்டவுடன் நீதிபதி திடுக்கிட்டார். அவர் முகம் மாரியது. உடனே தன்னை ஸ்திரப்படுத்திக்கொண்டு நிமிர்ந்து 'இந்த தேசத்துரோகிகள் யாவரும் இன்றைய நான்காம்நாள் தூக்கிலிடப்படுவார்கள்' என்று தீர்ப்புக் கூறினார். உடனே கைதிகளை விலங்கிட்டு ஜெயிலுக்குக் கொண்டேகினார்கள்.

நீதிபதி இந்த கர்னல் இளங்கோவனை யாருக்காவது தெரியுமா என்று வினவினார். ஒரு வயோதிப வக்கீல் தனக்குத்தெரியுமென்றார். ஆனால் அவர்வாயைத்திறக்குமுன் நீதிபதி வரகநகர் கலாசாலையில் அவன் வாசித்ததுண்டா என்று வினவினார்? வக்கீல் அவர் இன்னின்ன வருடங்களில் வாசித்தாரென்றவுடன் நீதிபதி சரேலென்று தன் ஆசனத்தை விட்டெழுந்து வேகமாய் வெளிச்சென்றார்.

அமராபுரிக்கும் அழகாபுரிக்கும் மூன்றுநாள்பிரயாணம். இக்காலத்தைப்போல் மோட்டார் வண்டிகளில்லை. குதிரைமேல் சவாரி செய்வதுதான் வெகு வேகமான வழி. தன் ஆடையாபரணுதிகளைக் களைந்துகொண்டு தன் குதிரைமேலேறி வாயுவேக மனோவேகமாக அழகாபுரி நோக்கி விரைந்து சென்றூர். வழியில் குதிரையை மாற்றிக்கொண்டே போனூர். அவ்விதம் மாற்றுவது அவருக்குக் கடினமையில்லை. ஏனெனில் அவர் பிரபல நீதிபதியன்றோ! இரண்டு நாளில் பிரதிநிதியிடம் சென்றூர். இவர் அலங்கோலத்தையும் அவசரத்தையும் கண்ட பிரதிநிதி இவரை சாந்தப்படுத்த முயன்றூர். ஆனுல் அவர் தன்னை பள்ளிக்கூடத்தில் இளங்கோவன் காப்பாற்றிய விர்த்தாந்தத்தைச்சொல்லி அவனை மன்னிக்கும் வரை உண்பதில்லையென்றும் அவன் தான் திரும்புவதற்குள் இறந்தால் தானும் இறப்பதாகக்கூறினூர். இதைச் செவியுற்ற கருணை வள்ளலாகிய ராஜப்பிரதிநிதி அமராபுரி கைதிகள் யாவரையும் கர்னல் இளங்கோவரின் பெருந்தன்மைக்கும் அவர் பிரஜைகளின் பிரதம நீதிபதிக்கு ஓர் காலத்தில் செய்த உபகாரத்தை முன்னிட்டும் மன்னித்ததாக ஒரு உத்திரவு எழுதிக்கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்டு காற்றினும் வேகமாய் பறந்து சென்றூர் நம் நீதிபதி. இதற்குள் கைதிகள் யாவரும் தூக்கிலிடப்பட கழுமரத்திடம் வரிசையாய் நிறுத்தப்பட்டிருந்தனர். அவரவர் தம் கடவுளை தியானம் செய்துகொண்டிருந்தனர். அக்கூட்டத்தில் வெகு வேகமாய் பிரதம நீதிபதி குதிரைமேல் வருவதைக்கண்டு பரபரப்பேற்பட்டிருந்தது. அவர் இளங்கோவரிடம் சென்றதும் குதிரையிலிருந்து குதித்து "இதோ என் கடன் தீர்ந்தது இளங்கோவா" என்று அவர் கையில் மன்னிப்புப்பத்திரத்தைக் கொடுத்தார். உடனே இரு சினேகிதரும் ஆலிங்கனம் செய்தனர். ஜனங்கள் எல்லோர் முன்னிலையிலும் நீதிபதி மாயாண்டி தன் சரிதையை சொன்னூர். சகல ஜனங்களும் விடுதலைபெற்ற கைதிகளும் இரு நண்பரையும் வாழ்த்திச் சென்றனர்.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று.

மனோதைரியம்.

டர்பன். சரஸ்வதி சபைத்தலைவர்
திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள்.

மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் மனோதைரியம் அவசியம் அமைந்திருக்கவேண்டும். எக்காரியத்தை செய்வதற்கும் மனோதைரியமே இன்றியமையாததாகும். பிறருடன் சம்பாஷிப்ப தற்கோ, அல்லது யுத்தம் செய்வதற்கோ அவசியம் வேண்டுவது மனோதைரியமே. மனோதைரியமின்றி ஒருகாரியத்தையும் செய்து விட முடியாது. மனோதைரியத்தால், ஆகாத காரியங்களை ஆகும்படி செய்து விடலாம். பற்றலரையும் பணியும்படி செய்துவிடலாம். மனோதைரியம் மிகுந்தோரிடம் பிறர் விரோதிக்கவோ எதிர்க்கவோ அச்சங்கொள்வர். ஏனெனில், அவர்களை எதிர்ப்போர் தோல்வி யடைவர் என்பது நிச்சயம். விரோதிப்போர் விரைவில் பணிந்து விடுவார்.

மனோதைரியத்தில் பலவிதம் உண்டு. அவைகள் அனைத்தை யும் நாம் நல்லதென ஒப்புக்கொள்ள முடியாது. ஏனெனில், அனு வசியமாய் சிலருக்கு முன்கோபத்தின் சக்தியால் 'மனோதைரிய' முண்டாகும். அஃது சிறந்த தைரிய மாகா. லாகிரிவஸ்துக்கள் உபயோகிப்போருக்கு லாகிரி மிகுதியால் மனோதைரியம் உண்டாக லாம். அதுவும் சிறந்ததாகா. நாம் கூற முற்பட்ட 'மனோதைரியம்' அடியிற் காரணத்துடன் காட்டுவதேயாகும். அதிக சக்தியுடைய தும் எக்காரியத்திலும் ஜெயத்தையளிப்பதுமான 'மனோதைரிய'ங் களில் சிலவற்றைக் கூறுவாம்:—

கற்புள்ள மாதர்கள் தங்கள் 'கற்புக்கோ' அல்லது 'காத லுக்கோ' பின்னம் ஏற்பட ஏதுவாகும் காலத்தில் அவர்களுக் குண்டாகும் மனோதைரியமே மற்றெல்லாவற்றிலும் சிறந்ததாகும். அதற்கு அதிக சக்தியுண்டு. அதுநிகரற்ற தன்மையுடைத்தானதா கும். எதிரிகளை இமைப்பொழுதில் அழிக்கும் தன்மை அதற்கு உண்டு. ஆனல் அத்தைரியம் அவர்களுக்கு அனுவசியமாய்நினைக்கும்

பொழுதெல்லாம் உண்டாய்விடாது. அதை அவர்கள் அற்பகாரியங்களுக்கெல்லாம் உபயோகம் செய்யார். தங்கள் உயிரினும் சிறந்ததான 'கற்பு'க்கோ'காத'லுக்கோபின்னம் ஏற்படும்போல் தோன்றுமேயாகில் அப்பொழுதுதான் அவர்களுக்கு அத்தைரியமுண்டாகும்.

யுத்தவீரன் யுத்தகாலத்தில் தன் சிரசைக் கொய்யவோ, அல்லது தன்னை வேறு எவ்விதமாகிலும் அழிக்கவோ முற்படும் பற்றலனைக் கொன்று தன்னுயிரைக் காத்துக்கொள்ள முயலுங்கால், அவனுக்குண்டாகும் 'மனோதைரியம்' சிறந்ததாகும். அத்தைரியம் தக்கபலனையளிக்கும். அதற்கும் அதிகசக்தியுண்டு.

பொது நன்மைக்கு உழைக்கும் உத்தம தேசாபிமானிகள் பிறருக்கு ஏதாகிலும் குறையோ—தீங்கோ ஏற்படுமாயின், அதை நீக்க முற்படும்போது அவர்களுக்கு உண்டாகும் மனோதைரியம் மகாசிறந்ததாகும். அதற்கும் சக்தியுண்டு. அது தக்கபலனையளிக்கும்.

முற்காலத்தில் நம் பாரதபூமியில் 'உதித்த கற்பரசி'களின் சரிதைகளை உய்த்து நோக்கினால், அவர்கள் மனோதைரியங்களை வெகுலகுவில் முடித்திருக்கிறார்கள் என்பது நன்கு புலனாகும்.

ஆடவர்களும் அனேக அரிய காரியங்களை மனோதைரியத்தின் சக்தியால் முடித்திருக்கின்றனர்.

ஆதலின் எண்ணிறந்த தைரிய சிகாமணிகளை ஈன்றெடுத்த பாரதத்தாயின் புத்திரர்களே! புத்திரிகளே! தைரியத்தின் சக்தியை உணரவேண்டுமாயின் கற்பரசிகளாகிய—சீதை, நளாயினி, சாவித்ரி, தமயந்தி முதலியவர்களின் சரிதைகளையும், யுத்தவீரர்களாகிய—ஸ்ரீராமர், லக்ஷ்மணர், பீமன், அர்ச்சுனன், பிருதிவி, சிவாஜி முதலிய அரசர்களின் சரிதைகளையும் வாசித்துணர்ந்து 'தைரியம்' என்னும் தளராத தன்மையளிக்கும் அரியசக்தியை பெறுங்கள். சிவாஜி ஓர் தைரியபுருஷனாய் விளங்கியதற்குக் காரணம், "ஸ்ரீராமாயணம்," "பாரதம்" முதலிய இதிகாசங்களை ஆராய்ச்சி செய்துணர்ந்து அவ்வழியே நடந்ததாகுமென்பதை நீங்கள் அறியவேண்டுவதவசியம்.

கம்பராமாயணக்கதிர்மணிக்கோவை.

நாரணன் நவில்வது.

(69-வது பக்கத்தொடர்ச்சி.)

தமையனுரைக் காணவரும் பரதனை ஸ்ரீராமவிரோதியென்று கருதிக் கோபங்கொண்டெழுந்த வேடுவர் தலைவனுகிய குகன் கூறுவதாகிய இச்செய்யுள், சொல்லும்போதே கோபக்குறிப்பு தோன்றுமாறு அமைந்திருத்தல் காண்க.

"ஆழநெடும்புனல் கங்கை கடந்திவர் போவாரோ
வேழநெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ"
தோழமை யென்றவர் சொல்லிய சொல் லொருசொல்லன்றோ!
ஏழமைவேட னிறந்திலனென்றனை யேசாரோ.

(அயோத்தியாகாண்டம் குகப்படலம் 15)

கங்கையின் ஆழத்தைப் பகைவர்கள் கடக்கமுடியாத செய்தியும், கூட்டமுள்ள யானைப்படைக் கஞ்சாத் தீரத்தையும், ஸ்ரீராமன் தன்னையும் தோழனென்று கூறிய அருமையையும், தனது உயிரிருக்கும் வரை விரோதிகள் வெற்றிபெற இயலாதென்பதையும், விளக்கும் இப்பாடல், எவ்வளவு அழகாயமைந்து குகன் கூறும் வீரமொழி அப்படியே படிப்போர்க்குப் புலனுகும்படி விளங்கவுரைக்கும் செய்யுளோசை சிறந்து நிற்றல் காண்க.

'ஆழ......வில்லாளோ! என்றசொற்றொடர் தனது ஆண்மையைக் குறிப்பதற்கேற்ற சொல்லாகவும், சொன்னயமும் பொருந்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. அன்றியும், நெடும், கடந், படை கண்டு என்ற சொற்களின் பிரயோகம் குகனது ஆற்றலை விளக்குவதாயுள்ளன. அன்பைக் குறிப்பதாயுள்ள அடுத்த அடியின் அழகிய சொல் மென்மைத் தன்மையதாய் அன்பின் இனிமையும் காப்பும் தோன்ற ழ, ய, ல, என்னும் எழுத்துக்களை வல்லினத் தோடு பிறழவைத்திருப்பதும் போற்றற்பாலதாம்.

"பஞ்சியொளிர் விஞ்சிகுளிர் பல்லவமனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர் சீரடியளாகி
யஞ்சொலிள மஞ்ஞையென வன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்."

(ஆரணியகாண்டம் சூர்ப்பணகைப் படலம் 31.)

ஸ்ரீராமபிரானது திருமேனியின் சௌந்திரத்தில் ஈடுபட்டு அவனை எப்படியாவது அணையவேண்டுமென்று கருதிய சூர்ப்பணகை தனது கோரமான வடிவத்தை யொழித்து, அழகிய ஓர் இளமங்கை வடிவுபூண்டு, சர்வாபரண பூஷிதையாய் மினுக்குங் குலுக்குமாக அந்தரத்திலிருந்து பூமியில் இறங்கிவந்ததைக் கூறுகின்ற இப்பாடல், எவ்வளவு அழகாக நடக்கிறதென்பதைக் காண்க.

கவியின்கதி நடையின் கதியைக் குறிக்கின்றது. வஞ்சமனத்தினளாதலால் மந்தகதியாய் வருகின்றனள்.

"சிலம்புகள் சிலப்பிடை செறித்தகழலோடு
நிலம்புக மிதித்தன ளெழித்தகுழிவேலைச்
சலம்புக வனற்றரு கணந்தகனு மஞ்சி
பிலம்புக நிலக்கரிகள் பின்றொடரவந்தாள்."

(பாலகாண்டம் தாடகை வதைப்படலம்.)

விஸ்வாமித்திர முனிவரைப் பின்தொடர்ந்து செல்லும் ஸ்ரீராமனைக் காண்டலும், தாடகை கோபத்தோடு எதிர்த்து வந்து பயமுட்டுகின்ற மூர்க்கத் தன்மையுள்ள தோற்றத்தை விளக்கும் இப்பாசுரம், அரக்கியர்களுக்கு இயற்கையாயுள்ள துஷ்டசுபாவத்தைக் காட்டுகின்றதன்றோ!

இதில் "சிலம்புகள் சிலம்ப" என்று இரட்டித்து மெல்லோசை கலந்த துள்ளலோசை தரவந்த சிலம்பின் 'கல்' என்னும் ஓசையைக் குறிக்கின்றது. இவ்வோசை இடையிடைக் கேட்பதெனத் தோன்ற எதுகைச் சீர்களாமாறும், மற்றைச் சீர்கள் இடையில் வல்லின மிரட்டித்தும், அவ்வினங்கலந்து வருதலும்,

கருவிளங்காய்த் தேமாச் சந்தமும், பாதங்களைப் பூமியதிர அழுத்திவைக்கும் குறிப்பையுந் தெரிக்குமாறுங் காண்க.

"நீந்தரும் புனலிடை நிவந்த தாமரை
யேய்ந்த தன்கோயிலே யெய்துவாளெனப்
பாய்ந்தனள் பாய்தலும் பாலின் பஞ்செனத்
தீய்ந்ததவ் வெரியவள் கற்பின் றீயினால்."

(யுத்தகாண்டம் மீட்சிப்படலம்85.)

கற்பின் பரிசோதனைக்காக மூட்டப்பட்ட எரியில், சீதை பாய்ந்து தனது கற்பின் தூய்மையால் அவ்வக்கினியைத் தணிவித்ததைக் காட்டும் இச்செய்யுள், படிப்போர்க்கு அவ்வாறே தோன்றும்படி அமைந்துள்ள ஓசைத்திறம்—கூர்ந்து கவனித்தறிக.

சீதை தீப்பாயும்போது அவள் மனத்தின் கண் ஒருதடையும் அற்றவளாய், ஓரேமனதாய் எரியில் பாய்ந்தனள் என்பதும், கலப்பற்ற மனமும், கற்புடைமையும் காட்டுவதான எய், கோய், எய், பாய் என்னுஞ் சொற்களைப் பிரயோகித் திருத்தலையுங் காண்க.

"விண்ணாட்டவர் மண்ணவர் விஞ்ஞையர் நாகர்மற்றும்
எண்ணாட்டவர் யாவரு நிற்கவோர் மூவராகி
மண்ணாட்டவர் காட்டுநர் வீட்டுநர் வந்தபோதும்
பெண்ணாட்ட மொட்டே னினிப் பேருலகத் துளண்ணா."

தர்மஸ்தாபனத்தின் பொருட்டுத் தடையாக எதுவரினும் ஓர்பொருட்படுத்தாது எரித்து நின்று வெற்றிபெறுவதென்னும் உறுதிமேற்கொண்டுள்ள இலட்சுமணர் மொழிவதான இப்பாடல், வீரவாதங்கள் நிரம்பித் தமையன்பாலுள்ள கரையற்ற அன்பின் மிகுதியால் பொங்கிப் பகைவரை அழிக்கவல்ல ஆற்றல் பொதிந்துள்ள சொன் மிகுதியாகத் தோன்றுதல் காண்க. வெகுளியின் தோற்றத்தை வல்லினப்பிரயோகத்தால் விளக்கியிருப்பது வெளிப்படை.

(தொடரும்.)

பெண்.

பண்டிதை, ஸ்ரீமதி. அசலாம்பிகை அம்மாளவர்கள்
எழுதுவது.

இந்த ஈரெழுத்தொருமொழிக்கு ஓதாதுணர்ந்த மூதாட்டியாராகிய ஔவைப்பிராட்டியார் ஓர் வெண்பாவின் மூலம் இலக்கணம் வகுத்து விளக்கியுள்ளார். அஃது பின்வருமாறு.

"அன்னை தயையும் அடியாள் பணியுமலர்ப்
பொன்னின் எழிலும் புவிப்பொறையும்—வன்னவுடல்
வேசி துயிலும் விறல்மந்திரி மதியும்
பேசில் இவையுடையாள் பெண்.

இவ்வெண்பாவினை ஆறுகூறுகளாகப் பிரிக்கலாம். உத்தமப்பெண்ணின் இயல்புக்குணங்கள் அடிப்படையான அறுவகை இயல்புகளோடு அரும்பிமலர்ந்து திகழ்கின்றனவென்பது தெளிவு.

இவ்வாறு கூறுகளில் ஐந்து குணங்கட்கு உவமை பெண் தன்மையினின்றே எடுத்தாண்டிருப்பதும் ஒரு குணம் ஆண்பால்இயல்பினின்றும்எடுத்து உவமித்திருப்பதும் ஆழ்ந்த கருத்தை உள்ளே அடக்கிக்கொண்டிருப்பது கவிஞர்உலகில்சுருங்கச்சொல்லிவிளங்க வைக்கும் திறம் ஔவையாருக்கே உரித்தானதென்பதை மறுப்பவர் இரார். எனவே இப்பெரியார் அருளிய எம்மொழித்தொடர்களினும் செம்மை அரும்பொருள்கள் செறிந்து நிற்பதில் வியப்பில்லை. அன்னை தயையும் என்பதனால் ஈன்றெடுத்ததாயின் தன்மை அதாவது துன்பம் சகித்தல், பயன் வேண்டாது உழைத்தல், அன்பின் மயமாயிருத்தல், மக்கள் நலம் கண்டு மகிழ்தல் ஆகியபெருமித குணங்கள் எல்லாப்பெண்களிடமும் இயல்பாயிருத்தல் அவசியம் என்பது பெறப்படும். மகப்பேறில்லாப் பெண்கள் பலர் இருப்பது உண்மையாயினும் அவர்களிடமும் உற்றார் உரியாரை அன்புடன் ஆதரிக்கும் கடமை இருக்கக்காண்கிறோம். இதுவே தாய்மைக்குணம்.

இரண்டாவது அடியாள்பணி என்பது. இதன் பொருள், தான் குடும்பப்பணிகளை ஏற்று நடத்துங்கால் குடும்பத் தலைவி என்னும் முனைப்பின்றி சலியாவுழைப்பில் விரும்பி ஈடுபட்டு கட்டுப்பட்ட உத்தம ஏவலாளரின் அமைதி அடக்கம் இவைகளை அங்கமாகக் கொண்டுதிகழ்தல் என்பது புலனாகின்றது. இதனால் குடும்பத் தலைவிகள் சோர்வில்லாதிருத்தல் ஊழியர்களுக்கு வியப்பும், களிப்பும், பட்சமும், மிகும்படி அவர்களுடன் சேர்ந்து பணியாற்றும் பண்புமுடையராயிருப்பர் என்னும் விசேஷ கருத்தும் கொள்ளக்கிடக்கின்றது.

மூன்றாவது மலர்ப்பொன்னின் எழில் என்பது. செல்வத்தின் அதி தேவதையாகிய இலக்குமிபோன்ற பொலிவுடையராயிருப்பது இன்றியமையாத தென்பதும் பெறப்படுகின்றது. பொலிவுடையராதல் பிறப்பிலேயே அமைந்திருக்க வேண்டியதென்பர். இப்பொலிவு விளக்கமே அகத்தின்கண் உள்ள குண நலங்களைக் காட்டும் அறிகுறியாகும். அகத்தில் அழகு முகத்தில் தெரியும் எனும் தொன்மை வாக்கியமும் இதனை வலியுறுத்தும். புறத்தே காணப்படும் பொலிவு அகத்தேயடங்கி (காணப்படாத) குண நலங்களைக்குறிக்கும் அடையாளமென்பதே தேற்றம். இதனையே கவியரசரும் புவியரசருமாய்ப் புகழ்பெற்ற அதிவீரராம பாண்டியர் தாமியற்றிய நைடதத்தில் "காமநூல் பகருமுன்னூலோர் இலங்கெழில் அளவு குணமென விசைப்பர்" என்று கூறியுள்ளார். ஆகவே முகப்பொலிவு மகளீர்க்கு இன்றியமையாததென்பது பெறப்படுகின்றது.

நான்காவதாக புவிப்பொறை உடையராயிருத்தல் வேண்டும் என்பது "அகழ்வாரைத் தாங்கும் நிலமெனத் தம்மை இகழ்வார்ப்பொறுத்தல் தலை" எனும் குறளின்படி எத்துணை மனக்கசப்புகள் ஏற்படுமாயினும் முகமலர்ச்சி குன்றாது பொறை கூர்ந்து தன்னை இகழும் பந்துக்களையும் ஆதரித்து ஒழுகுதல் உத்தமக் குலமடந்தையரின் இயல்புக்குணமென்பது குறிப்பு, இனி வன்னவுடல் வேசிதுயிலும் என ஐந்தாவதாக உவமித்தார். இதனால் உத்தம விலக்கணமுடைய மகளீர் மெல்லிய சரீர இயற்கையும், விநய சம்பத்தும், இன்சொல்லும், மனதைக்கவரும் வசீகரத்தன்மையும் அமையப்பெற்றவராயிருத்தல் வேண்டுமென்பதும் துணிபு.

(தொடரும்.)

இமயமலையும்—காந்தியும்.

(கோவை, திரு. N. லக்ஷ்மணசாமி அவர்கள் எழுதுவது.)

புனிதமான ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்தல் சகல மதஸ்தினர்களுக்கும் பொதுவான ஓர் வழக்கம். இந்து சம்பிரதாயப் படி நான்கு முக்ய ஸ்தலங்களை தரிசிப்பதானால் இந்தியா தேசமெங்கும் பிரயாணஞ்செய்தாகவேண்டும். காசி, த்வாரகா, பூரி-ஜகன்னாத், கன்னியாகுமரி ஆகியவை. இயற்கை அழகு ததும்பும் இடங்களாகவே அமைந்திருக்கின்றன. கோவில் வழிபாட்டிலும் விக்ரக ஆராதனையிலும் நம்பிக்கை இல்லாதவர்களுங்கூட இது போன்ற இடங்களைப் பார்வையிடும்போது ஒருவித உன்னதமான மனோ நிலைமையும் ஆர்வமும் அடைகிறார்கள். இதற்குச் சான்றாக இரண்டு உதாரணங்களை எடுத்துக்காட்டலாம்.

ஸ்வென்-எடின் என்பவர் ஸ்வீடன் தேசத்திய மேதாவி. இமயமலையின் மகத்வங்களைப்பற்றி தமது யாத்திரைக் குறிப்புகளை இரண்டு புஸ்தகரூபமாக சுமார் இருபது வருஷங்களுக்கு முன்பு வெளியிட்டார். இமயமலைச் சாரலில் "எவரஸ்ட்" என்றழைக்கப்படும் சிகரத்துக்கு மேல் உயரமுள்ளது எந்தமலையுமில்லை.)இதன் உயரம் 29,000 அடி.) "கௌரி--சங்கர்" என்பது இச்சிகரத்தின் இந்தியப்பெயராயிருந்தும், இதை பிரபலப்படுத்தியவர் ஒரு வங்க தேசத்தவராயிருந்தும் ஓர் பிரபல ஆங்கிலேய அதிகாரியின் பெயர்தான் இதற்கு வழங்கப்பட்டிருக்கிறது.

நிகொலஸ்-ரோரிக் என்கிற பிரசித்திபெற்ற சித்திரக்காரர் இமயமலையை ஓர் மனோரதமாக வைத்துக்கொண்டு சிற்சில அபூர்வமான படங்களை சமீப காலத்தில் தயாரித்திருக்கிறார். இவைகளை அமெரிக்காவில் நியூ-யார்க் நகரத்தில் ரோரிக்-மியூஸியத்தில் வைத்து உலகத்தாரெல்லாம் மெச்சும்படி காண்பிக்கிறார்கள்.

ராஜாராம் மோகனரேய், மகரிஷி தேவேந்திர நாத தாடர், டாக்டர் ஜகதீஸ் சந்திரவசு, தேசபந்து சித்தரஞ்சன தாஸ், தியாக மூர்த்தி மோதிலால் நேரு ஆகிய தலைவர்கள் அவரவர் தம் ஓய்வு காலத்தில் இமயமலையில் சிறிது காலமாவது தங்குவது வழக்கம். விவேகானந்த சாமிகளுடன் இமயமலையில் சில மாதங்கள் சஞ்சாரம் செய்ததைக்குறித்து அழகிய ஒரு சிறு புஸ்தகத்தில் மிக்க ருசிகரமான மாதிரியில் சகோதரி நிவேதிதை எழுதியிருக்கிறார்கள்.

இமயமலையில் மாயாவதி என்னுமிடத்தில் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தைச்சேர்ந்த சன்னியாசிகள் (அமெரிக்கர்களும் இந்தியர்களும்) ஓர் ஆச்ரமம் ஏற்படுத்தி நடத்திவருகிறார்கள். சிவநேசமும் சமூக சேவையுமே இத்திருக்கூட்டத்தாரின் வாழ்க்கையின் நோக்கம். இவர்களது மைலாப்பூர் சஞ்சிகையான "வேதாந்த கேசரி"யின் மார்ச்சு மாதத்திய இதழில் திருக்கைலாயகிரி என்று பொருள்படும்படி ஓர் கட்டுரையை தேசிகானந்த சாமி எழுதியுள்ளார்.

மானசரோவர் என்கிற பிரம்மாண்டமான குளத்தில் நீராடுவதும் கைலாயகிரியைச்சுற்றி வருவதுமான வழக்கம் அங்குள்ள இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் (திபெத்வாசிகள்) பொதுவாயிருப்பதாகத் தெரிகிறது. மலை அடிவாரம் வரையில் மோட்டார் பஸ் போக்குவரத்து நடக்கிறது—இதற்கு மேல் கால் நடையாகத்தான் மலையேறவேண்டும். அவ்விடத்திய மலைவாசிகளாகிய பூதியம் பெண்களுக்கு கலியாண விஷயத்தில் விசேஷ சுதந்தரமிருப்பதை தேசிகானந்தசாமி விரித்திருக்கிறார். இப்பெண்கள் எல்லோரும் தக்ளியில் நூல் நூற்பவர்களென்றும் இதனால் அழகிய சால்வைகளும் ரத்னகம்பளங்களும் இதுகாலையில் கூட தயாராவதாகச் சொல்லப்படுகிறது.

உலகத்தில் உயர்ந்த சிகரம் கௌரி—சங்கர் உலகத்தில் உயர்ந்த மனிதர் யார்? இந்த இரண்டு அற்புதங்களையும் நேரில் பார்க்கும் பொருட்டுத்தான் ஆயிரக்கணக்கான அமெரிக்கர் இந்தியா

விஜயம் செய்கிறார்கள். அதிலும் மஹாத்மா காந்தியை தரிசிக்காமல் அமெரிக்கா திரும்பும் யாத்ரீகர்கள் மிகமிகச் சிலரே. இவர்கள் மட்டுமல்ல. இதர தேசத்தினரும் சபர்மதி ஆச்ரமம் வந்து தங்கியிருந்து காந்தியடிகளிடம் அளவளாவிப்போகிறார்கள். மூரியல்-லிஸ்டர் என்கிற ஆங்கிலமாது தமது ஞாபகக் குறிப்புகளை புஸ்தக ரூபமாக எழுதியிருக்கிறார்கள். ஆஸ்திரேலியா நீதிபதிகளில் ஒருவர் "பாபு—காந்தி" என்கிற மகுடமிட்டு ஒர்சிறு புஸ்தகத்தை சமீப காலத்தில் வெளியிட்டிருக்கிறார். "மகாத்மா பட்டத்தைக் காந்தியடிகள் கொஞ்சமும் விரும்பவில்லை என்பது வெளிப்படை. தென் ஆப்ரிக்கா ஆச்ரமத்தில் இருந்ததுபோலவே சபர்மதி வாசிகளும் அவரை பாபுஎன்றுதான் அழைக்கிறார்களே ஒழிய "மகாத்மா" என்று சொல்வதே கிடையாது. காந்திக்கு வேண்டியவை சத்யமும்—அஹிம்சையும் தான். புகழுரை அவருக்குத் தேவையில்லை என்பதை நாமெல்லோரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.

காந்தியை நேரில் தரிசிக்காமலே உலகமெங்கும் உத்தமர்கள் அவரது சத்யாக்கிரக தத்துவத்தின் நிகரற்ற தன்மையை ஆதரிக்க ஆரம்பித்திருக்கிறார்கள் என்று அநுபவத்தில் பார்த்துவந்திருக்கும் அவரது ஆத்ம நண்பராகிய மகாகவி ரவீந்திரநாத தாகூர் சொல்லுகிறார். "மகாத்மா" இர்வினும் இதன் உட்பொருளை ஒருவாறு அங்கீகரித்துக்கொண்டிருக்கிறார். காந்தியின் வெற்றி இமாலய வெற்றியே. இதில் ஆங்காங்கு ஏற்பட்டிருக்கும் சந்தேகங்கள் பனிபோல மறைந்துவிடுமென்று நம்புகிறோம்.

இப்புத்தகங்கள் வேண்டுமா?

எனது நெடுங்கனவு ரூ.	0—6—0
இரட்டைப் புலர் சரித்திரம்.	0—6—0
தமிழன்.	0—6—0
ஒட்டக்கூத்தர் ஈட்டி எழுபதுபாடிய வரலாறு.	0—2—0
'நவமணி' முதலாவதாண்டு காலிகோபைண்ட்	1—8—0

மானேஜர்,
'நவமணி' பத்திரிகாலயம், பள்ளத்தூர்.

கனகவல்லி

அல்லது

கள்வர் கவர்ந்த கன்னிகை.

கோவை. திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள்.

(73-வது பக்கத்தொடர்ச்சி)

ஒன்பதாம் அத்தியாயம்.

கணபதிதேவன் கதை.

"குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு." (திருக்குறள்)

அமைச்சு, நாடு, அரண், பொருள், படை, நட்பு என்னும் ஆறு அங்கங்களால் அமைந்ததும், ஐதராபாத்துக்கு வடகிழக்கேயுள்ளதும், 'காகதீய கணபதிகள்' என்கிற ஆந்திர ராஜாக்களின் தலை நகராகச் சிறந்ததும், தெலுங்கானுவின் பிரதான பட்டணமாகத் திகழ்வதும் 'ஓரங்கல் நாடு.' இந்நாடு கிழக்கில் 'சமுத்திரக் கரை'யும்; தெற்கில் ஐதராபாத் 'ஸ்ரீசைலத்தை'யும்; மேற்கில் 'திருவேங்கடமலை'யையும்; வடக்கில் 'கோதாவரி மாகாணத்'தையும் எல்லைகளாக உடையது. இந்நாட்டைக் கணபதிதேவனுக்கு முன்னர் அரசாட்சி செய்தவர்கள் ஆந்திர (துளுவ) ஆதேவ அரசர்கள். இவர்கள் பத்தொன்பதின்மர் ஆவர். இருபத்தொன்பதின்மரில் பதினெண்மர் 370 ஆண்டுகள் அரசு செய்தனர். இச்செய்தி ஓரங்கலிலுள்ள ஓர் ஆலயத்தில் வெட்டப்பட்டுள்ள சாஸனத்தில் இருப்பதாக "ஆரி" கிரந்தம் என்ற நூலின் முதல் வால்யத்தில் கூறப்பட்டிருக்கிறது. மேற்குறித்த பதினெண்மரில் 'முதலாம் திரிபுவன மல்ல ராஜா' என்பவன் ஓரங்கலை முதன் முதல் ஸ்தாபித்தான். இவனுக்குப்பின் 'புரோளராஜா' 'முதலாம் பிரதாபருத்தி

ரன்' கணபதிதேவன் என்ற மூன்றரசர் ஓரங்கலே அரசு செய்த னர். இவர்களில் இறுதியாகக் கூறப்பட்ட கணபதிதேவன் வரலாற்றை உங்களுக்குக் கூறுகின்றேன். அவ்வரசன் வரலாறு அடியில் வருமாறு:—

இவன் கி. பி. 119()-ஆம் ஆண்டு முதல் 1258-ஆம் ஆண்டு வரை ஓரங்கலின் அரியாசனத்தமர்ந்து குடிகள் கண்ணென மதிக்குமாறு அரசுசெய்து வந்தான். இக்கணபதிதேவன் ஜாதி, அல்லது வமிசத்திற்கு (காகத்திய) காகதீயர் என்பது பெயரென்று வரலாறுகளில் கூறப்பட்டிருக்கிறது. இக்காகதீய வமிசத்தில் 'கணபதிதேவன்' 'பிரதாபருத்திரன்' என்ற இரண்டு அரசர்களும், 'ருத்திரம்மதேவி' என்ற அரசியுமே பரவிய கீர்த்திக்கு உறைவிடமாய், யாவர் அன்பிற்கும் உரியராய் மேன்மையுற்று ஆந்திர நாட்டிற்கேயன்றி தட்சிண இந்துஸ்தானத்திற்கும் விசேட மதிப்புடையவராய் விளங்கினர். கணபதி தேவன், பிரதாபருத்திரன் ஆகிய இரு பெருந்தேவர்களும், ருத்திரம்ம தேவி என்ற வீரமிக்க இராணியும்போல நமது தேசத்திலேயல்ல, மற்றெந்த தேசத்திலாவது எந்தக்காலத்திலேனும் அலங்கார பூதர்களாய் இருந்திருக்கமாட்டார்களென்று யாதொரு சந்தேகமுமின்றிக் கூறலாம். இத்தகைய புண்ணிய புருஷர்களை நினைந்து ஆந்திரதேச மக்களனைவரும் இக்காலத்திலும், 'நமது தேசம் மேலான ராஜ ரத்தினங்களைத் தோற்றுவித்த வைரக்கனிகளின் நிலைக்களம்' என்று வாயாரக் கூறலாம். 'ஆந்திரதேச சரித்திரம்' என்ற இதிகாசத்தில் இம்மூவர் திருப்பெயர்கள் முதன்மையான இடம்பெற்று, பெரும்புகழ் நிலவி இதிகாசத்துடன் விளங்கிக்கொண்டிருக்கின்றன. இவ்வரிய இனிய வரலாறு கூறுவோர்க்கும், கேட்பவர்களுக்கும் பேரானந்தமாயிருக்கும். கணபதிதேவன் என்னும் மன்னர் சிகாமணியைப்பற்றியும், அவனது சிறந்த நீதிபரிபாலனத்தைப் பற்றியும், விசேடமாக நான் அறியாதுபோனாலும், அறிந்தளவு அவன் குடிகளின் நன்மையைக் கவனிப்பதில் முதன்மையான முயற்சிகொண்ட உத்தமவேந்தன் என்று தாராளமாகச் சொல்லலாம். இவன் ஓரங்கல் சாம்ராஜ்யத்தை அரசுசெய்துகொண்டிருந்த காலத்தில் 'அனுமசித்தி மகாராஜா' என்பவன் 'நெல்லூர் நகரை'ப் பரிபாலித்துக்கொண்டிருந்

தான். இவனது பேரவையைத் தலைமைப் புலவராயிருந்து அலங்கரித்த திக்கன்ன சோமயாஜி வியாச முனிவரால் எழுதப்பட்ட சமஸ்கிருத மகாபாரதத்தின் 'பதினைந்தாவது பருவத்தை' ஆந்திர பாஷையில் கல்வித்திறம் விளங்க அமிர்த தாரைகளைப் பூமண்டலத்தில் எங்கும் நிறையச் செய்வதுபோலக் கற்பனைகள் பொலிய காவியரஸங்கள் ஊற்றெடுக்க வியற்றி ஆந்திரபாஷை பூமண்டலத்தில் இருக்கும் காலமளவும் ஆந்திர மகா ஜனங்களின் நன்றியறிதலுக்குப் பாத்திரமாகும்படி செய்தனர். இத்திக்கன்ன சோமயாஜி மகாகவி சார்வபௌமன், அநுமசித்தி மகாராஜாவுக்கு அமைச்சராகவும், சமஸ்தானப்புலவராகவும், மித்திரனாகவும்இருந்தார். மகாகவி யொருவர் ராஜகார்ய வல்லராய், அரசனுக்கு உயிரினுஞ் சிறந்த நண்பராய் சிறந்து விளங்கியது ஆந்திரநாட்டுக் கவியுலகில் அக்கிரகண்ணியராகவும், கவிகேசரியாகவும் புகழ்பெருகிய திக்கன்ன சோமயாஜியே ஆவர். இம்மாபெரும் புலவர், பாவலர், நாவலர், புலவர் சிரோமணி, பாலசரஸ்வதி, மகாவித்துவான் என்ற பட்டம்பெற்ற புலவர்கட்கெல்லாம் தலைவராய்த் தமது ஆணைக் கடங்க நடக்கச்செய்ததனாலும்; இதுபோலவே அமைச்சு விஷயத்திலும், யானைபோல் பலங்கொண்ட வேற்றரசர்களும், புலிபோற் சீறுகின்ற பகையரசர்களும், திக்கன்னரின் உத்திரவுக்குக் கீழ்ப் படிந்து நடந்துகொண்டதனாலும், அரும்பெரும் கீர்த்திக்கு உறைவிடமாய்த் திகழலானார். இத்தகைய கவீச்சுரனை அநுமசித்தி அரசன் அமைச்சராககொண்டது அவன் அளப்பரிய புண்ணியவான் என்பதைப் புலப்படுத்துகின்றது. அம்மட்டோ! ஆந்திர மகாபாரதத்தை பூலோகத்தில் அவதரிக்கச் செய்த அபாரவியாசன் என யாவராலும் புகழ்ந்து பாராட்டப்பெற்ற 'நன்னயபட்டாரகன்' எனப்பெயரிய புலவர் பெருந்தகையையும் தனது ஆஸ்தானத்துக் கவீச்சுரராக அமர்த்திக்கொண்டு அவரது மிருதுவான வசனாமிருதத்தைத் தனதிரு செவிகட்கும் இரத்தின குண்டலங்களினும் மேலான விலைமதித்தற்கரிய கர்ணபூஷணமாக அணிந்து ஆனந்த பரவசனாய், ராஜராஜ நரேந்திரனைப்போல் பெருவிதமாக வீற்றுத் தனதிரு பாரிசங்களிலும், திக்கன்ன சோமயாஜியையும், நன்னய பட்டாரகனையும் எழுந்தருளச்செய்து அவர்களைக்காண்பதனாலேயே தனது கண்கள் களிப்படையவும், அவர்களை வணங்குவதினா

லேயே தனது கைகள் பெருமை பெறவும், விற்பன விளைவும், கற்பனைச்செறிவும் மிகுந்த அவர்களது கவிதாமிருத தாரைகளைச் செவிமடுப்பதனால் காதுகள் புனிதமுண்டாகவும் பேறுபெற்றது பெரும்புண்ணியமும், பேரதிர்ஷ்டமுமேயாம். அநுமசித்தியின் நீதி நிர்வாகச்சிறப்பையும், திக்கன்னசோமயாஜியின் அமைச்சுத் திறமையையும் கண்டார் யாரும் 'இவ்வரசனுக்கு இவ்வமைச்சனே தகும். இவ்வமைச்சனுக்கு இவ்வரசனே சரி'யென்று புகழ்ந்து பாராட்டிப் பேசினர். இங்ஙனம் அரசனும், அமைச்சரும் ஒரு தாய் வயிற்றில் பிறந்த சகோதரரைப்போல் ஒருமைப்பட்டு ஒரு மனத்தராய் தேசத்தை நன்றாக ஆண்டுவந்தனர். இங்ஙனம் ஆண்டுவருகையில் திடீரெனப் பயிரைச் சேதப்படுத்தும்; ஒருவகை வெட்டுக்கிளிகள் பயிரைப் பாழ்படுத்தப் படையெடுத்து வருவது போல், அநுமசித்தியின் நாட்டின்மீது வேற்றரசன் தண்டெடுத்துப் போர்க்கெழுந்தான். இருவர் படையும் நெருங்கிப்போர்புரிந்தன. வெற்றி தோல்வி ஒருவர் பங்கன்று. அது தெய்வசுவாதீனம். தோல்விஸ்தானம் அநுமசித்திக்கு வாய்ந்தது. அவனது அரியாசனம் வெற்றிவேந்தன் கைவசமாயிற்று. திக்கன்ன சோமாஜியின் பேரன்பும், அரசபக்தியும் தவிர தனதென்று சொல்லக்கூடிய பொருள் ஒன்றேனும் இல்லை. இராஜ்ய லட்சுமியினாலும், சேனைகளினாலும், பந்துக்களாலும், தைரியத்தாலும் கைவிடப்பட்டுத் தம்மைத்தவிர வேறு உதவியில்லாது தனியே வீற்றிருக்கின்ற தமது மாணவன்; தமது உண்மைத் தோழன்; தமது அரசன்; தமது போஷகனுமான அநுமசித்தியை, திக்கன்ன சோமயாஜி பார்த்து அரசே அஞ்சாதீர்கள்.

"ஆறிடுமேடு மடுவும்போ லாஞ்செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தில்" எனவும்;
"அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்"

எனவும் ஆன்றோர்களால் பாடப்பட்டபடி செல்வம் நிலையற்றது.

(தொடரும்.)

தமிழ்.

திரு.போன்.வே. சோமசுந்தரன் அவர்கள் மேலப் பெருமழை.

தமிழ்மைந் தீரே தமிழ்மைந் தீரே (1)
அமிழ்தினு மினிய தமிழ்மைந் தீரே
ஆசில் வள்ளுவரறைந்தி டருந்தமிழ்
பேசு மிளங்கோபோற்று மெழிற்றமிழ்

கம்பர் கனிந்த கவிசொ லிளந்தமிழ் (5)
உம்பர் விழையு முயரிய வின்றமிழ்
ஔவை யுரைத்த கௌவையி லின்றமிழ்
பவ்வம் போலும் பரவிய சொற்றமிழ்

மணிவா சகனார் அணிசெ யருந்தமிழ் (9)
பிணி யகற்றிடு நற்பெற்றி பெருந்தமிழ்
மூவர் மொழியமு தற்றிடு மெய்த்தமிழ்
ஏவலி றைவனியற்று மியற்றமிழ்

பாணர்க் கீசன் பாண்செ யிசைத்தமிழ் (13)
ஆடக மன்றிறை நாடக நற்றமிழ்
வைகையி னெதிர்ந்த தெய்வத் திருத்தமிழ்
செய்கையி னன்றே செப்பு பசுந்தமிழ்

ஒருமையிற் கற்றோர்க் கெழுமையு முதவு (17)
அருமைநந் தமிழ்தா னன்புடை யீரே
அன்புடை யீரே அந்தோ! அந்தோ
இன்றைக் குறுநிலை என்னே! என்னே!!

உலகம் விழுங்கிய வுத்தம நந்தமிழ் (21)
நிலையிடம் பெறுஅ துலைத னன்றேயோ

அருந்தவத்தீன்ற அன்னையைத் துறந்து
வரைவின் மகளிர் வலைப்படுபவர்போல்

மாற்றார்க் காட்ச்செயல் மாண்பெனநினைதிர் (25)
போற்றா விடுத்தனிர்! புண்ணியத்தாயை
கண்விழித் தெழுமின்! உழக னிறுவுமின்
கலைபலகன்மின்! கற்றோர்ப் போற்றுமின்

இளஞ்சிறார் பயிலிடமியற்றுமின் (29)
வளம்பெரு. நந்தமிழ். வாழிய வென்றே.

மானேஜர் அறிவிப்பு.

நமது பத்திரிகையின் வெளிநாட்டுப் பிரதிநிதியாக நியமிக்கப் பட்டிருந்த கீழாநிலைக்கோட்டை ஆ. மு. ரெத்தினம் என்பவர் மலேயாவில் பணத்தை வசூல்செய்து ஒழுங்காக கணக்குப்படி பணங்களை அனுப்பாமலும் தன் பெயரை சில இடங்களில் மாறுதலாக ஆ. மு. விற்குப்பதில் கா. மு. ரெத்தின மென்றும் சில இடங்களில் கா. மு. ஸ்ரீனிவாஸனென்றும் இவ்வாறெல்லாம் சூடிக்கொண்டு பலவேலைகளைச் செய்துகொண்டிருந்ததை அறிந்த நாம் அவரை நமது பிரதிநிதி ஸ்தானத்திலிருந்து நீக்கிவிட்டோம். இனி அவரிடம் எவரும் எவ்வித சம்மந்தமும் நமது பொருப்பாகச் செய்துகொள்ளக் கூடாதென்றும் அன்றிச் செய்தால் அது நம்மை உடன்படுத்தாதென்றும் அறிவித்துக்கொள்வதோடு நமது 'நவமணி' சம்மந்தமான பணங்களை வைத்திருப்பவர்கள் நேரில் நமக்கு அனுப்பிவிடும்படியும் வேண்டிக்கொள்ளுகிறோம். இதற்கு முன் பணங்கட்டிப் பத்திரிகை பெறுதார் ரசீது நம்பருடன் அறிவித்தால் கவனித்து அனுப்புகிறோம்.

மானேஜர் 'நவமணி' பத்திரிகாலயம்,
பள்ளத்தூர்.

காங்கிரஸ் தீர்மானம்.

கராச்சிக் காங்கிரஸ் மகாசபையில் இறுதியாக நிறைவேறிய தீர்மானங்கள் வருமாறு:—

காலஞ்சென்ற தலைவர்கள்.

1. "பண்டித மோதிலால்நேரு, மௌலானு முகமது அலி, மௌல்வி மஷ்ருல்ஹக், திரு. ரேவா சங்கர ஜகஜீவன் ஆகியவர்கள் காலஞ்சென்றதற்கும் தற்போது நடந்த போராட்டத்தில் வீரர்களான ஸ்திரீ புருஷர்கள் சிலர் உயிர்விட்டதற்கும் காங்கிரஸ் மிக வருந்துகிறது. காலஞ்சென்றவர்களின் குடும்பத்தாருக்கு இக்காங்கிரஸ் தனது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது. அதோடு தேசத்தார் பலரும் அவர்களின் துன்பத்தில் பங்கெடுத்துக்கொள்ளுவதாகவும் காலஞ்சென்றவர்களின் குடும்பத்தாருக்கு இக்காங்கிரஸ் உறுதி கூறுகிறது"

அரசியல் கைதிகள் விடுதலை.

2. "காங்கிரஸுக்கும், அரசாங்கத்துக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் நோக்கம் கிரேட்பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் நல்லெண்ணத்தை வளர்ப்பதாகவிருந்தால், அதிகாரத்தை விட்டுக்கொடுக்கக் கிரேட்பிரிட்டன் உறுதிகொண்டிருப்பதை உண்மையில் அந்த ஒப்பந்தம் காட்டுவதாகவிருந்தால், அரசாங்கம் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாத எல்லா ராஜீயக் கைதிகளையும் அவசரச்சட்டக் கைதிகளையும் விடுவிக்கவேண்டும். ராஜீய அபிப்பிராயங்களுக்காகவும், ராஜீயக்காரியங்களுக்காகவும் இந்தியர்களுக்கு ஏற்படுத்தியுள்ள அசௌகரியங்களைப் போக்கவேண்டும். இந்தத் தீர்மானத்தின்படி அரசாங்கத்தார் நடந்துகொண்டால், சமீபத்தில் பகத்சிங் முதலியவர்களைத் தூக்கிலிட்டுவிட்டதன் பயனுக நாட்டில் ஏற்பட்டுள்ள ஆத்திரம் சற்று அடங்குமென்றும் காங்கிரஸ் ஞாபகப்படுத்துகிறது."

கான்பூர்க் கலவரம்.

3. "பலரது உயிர்ச்சேதத்துக்குக் காரணமாகவிருந்ததும் பலர் காயமடைவதற்குக் காரணமாக விருந்ததுமான கான்பூர்க் கலவரத்தைக் கண்டு இச்சபை வருந்துகிறது. அதில் காலஞ் சென்றவர்களின் குடும்பத்தாருக்கு மரியாதையுடன் காங்கிரஸ் அநுதாபம் காட்டுகிறது. காயமடைந்தவர்களிடமும் காங்கிரஸ் அநுதாபப்படுகிறது. ஐக்கிய மாகாணக் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பண்டித கணேசசங்கர வித்யார்த்தி கலவரத்தில் அகப் பட்டுக் காலகதியடைந்ததற்காகக் காங்கிரஸ் மிக வருந்துகிறது. அவர் தன்னலமற்ற தேசீய ஊழியர்களில் முதன்மையாக விருந்த வர். ஜாதிமத பேதமின்றி நடந்துகொண்டுவந்ததால்அவர்எல்லோ ராலும் விரும்பப்பட்டவர். அவரது குடும்பத்தாருக்குக் காங்கிரஸ் அநுதாபம் தெரிவிக்கையில், இவ்விதம், அபாயத்திலிருந்தவர் களைக் காப்பாற்றி அமைதியை உண்டுபண்ண முயற்சித்த அவர் தமது அரிய உயிரையே தியாகம் செய்ததைக் கண்டாவது பல ரும் அவரது தியாகத்தைப் பாராட்டிச் சமாதானத்தை வளர்க்க வழிதேடவேண்டும், எப்போதும் பழிக்குப்பழி வாங்கும் உணர்ச்சி கூடாது எனக் காங்கிரஸ் அபிப்பிராயப்படுகிறது. இந்தச் சச்சர வின் காரணத்தைக் கண்டுபிடித்துச் சமரசம் உண்டுபண்ணவும் இவ்விஷமம் மற்ற ஜில்லாக்களுக்குப் பரவாமலிருக்க வழிதேட வும் கீழ்க்கண்டவர்களைக் காங்கிரஸ் ஒரு கமிட்டியாக நியமிக்கி றது. திரு. புருஷோத்தமதாஸ் தாண்டன், ஜனுப்குவாஜாமஜித், ஜனுப்ஸாப்ரூல் மல்க், திரு. டி. ஏ. கே. ஷெர்வானி, பண்டித சுந்தரலால், டாக்டர் பகவன்தாஸ் (தலைவர்)"

பகத்சிங் தூக்கு.

4. "ராஜீயசம்பந்தமாகச் செய்யப்படும் பலாத்காரச் செயல் எவ்விதமாயினும் இக்காங்கிரஸ் அதனோடு சம்பந்தப்படாது; அதையாதரிக்கவும் மாட்டாது. காலஞ்சென்ற பகத்சிங், அவரது தோழர்களான ராஜகுரு, சுகதேவ் ஆகியவர்களின் தைரியத்தை யும் தியாகத்தையும் போற்றுகிறது. அவர்கள் மாண்டதுபற்றி அவர்களின் குடும்பத்தாருடன் வருந்துகிறது. இவர்கள் மூவரை

யும் தூக்கிவிட்டது பழிக்குப்பழி வாங்கும் காரியமாகுமென்றும் அதோடு தேசத்தினர் பலரும் ஒருமுகமாக வெளியிட்ட கோரிக்கையை வேண்டுமென்றே புறக்கணித்ததுமாகும் என்றும் காங்கிரஸ் அபிப்பிராயப்படுகிறது. அதோடு இந்தச் சமயத்தில் இரு நாட்டினருக்கும் நல்லெண்ணம்வளரவேண்டியது அவசியமாதலால் அதற்கு ஏற்பட்ட ஒரு நல்ல சந்தர்ப்பத்தை அரசாங்கத்தார் இழந்துவிட்டார்கள் என்றும், வேறுவழியின்றி ராஜீய சம்பந்தமாகப் பலாத்காரத்திலிறங்கும் ஒரு கோஷ்டியாரைச் சாத்விகமான வழிக்குத் திருப்ப ஏற்பட்ட தக்கதொரு சந்தர்ப்பத்தையும் அரசாங்கத்தார் இழந்துவிட்டார்கள் என்றும் இக்காங்கிரஸ் அபிப்பிராயப்படுறது.''

காந்தி இர்வின் ராஜி.

5. "இந்திய அரசாங்கத்துக்கும் காங்கிரஸ் கார்யக்கமிட்டிக்கும் தற்காலிகமாக ஏற்பட்ட சமரஸ ஒப்பந்தத்தைக் காங்கிரஸ் ஆராய்ந்து பார்த்தது. அதை இக்காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளுகிறது. ஆனல் காங்கிரஸின் லட்சியம், 'பூரணசுயராஜ்யம்' அதாவது 'பூரண சுயேச்சை' தான் என்பதையும் தெளிவாகத் தெரிவித்துக்கொள்ளுகிறது; இந்த ஒப்பந்தத்தால் அதற்கு மாறுதல் ஏற்படாது. எந்த மகாநாட்டிலாவது காங்கிரஸ் பிரதிநிதிகள் பிரிட்டிஷ் அரசாங்கப் பிரதிநிதிகளோடு கலந்துகொள்ள நேர்ந்தால் அவர்கள் இந்த லட்சியத்தைத்தான் வற்புறுத்துவார்கள். அதிலும் முக்கியமாகநாட்டினருக்குராணுவ விஷயமாகவும் வெளிநாட்டு விஷயமாகவும் செல்வநிலை விஷயமாகவும் பொருளாதார விஷயமாகவும்அதிக்கமிருக்கவேண்டும். பிரிட்டிஷ் ஆரசாங்கத்துக்கும் இந்தியாவுக்கும்உள்ள பணசம்பந்தமானகாரியங்களைப் பட்சபாதமற்ற விசாரணைச் சபையார்பரிசிலனை செய்துஇந்தியாஎவ்வளவு தூரம்பொறுப்பேற்றுக் கொள்வதென்றும், இங்கிலாந்துஎவ்வளவு தூரம் பொறுப்பு ஏற்றுக்கொள்வதென்றும் அபிப்பிராயம் கூற அதிகாரமிருக்கவேண்டும். இருதரப்பாருக்கும் அவரவர்கள் விரும்பும்போது சம்பந்தத்தை அறுத்துக்கொள்ளவும் அதிகாரம் இருக்கவேண்டும். இதற்கிடையில் காங்கிரஸ் பிரதிநிதிகள் இந்தியாவின் நன்மைக்கேற்ற வழியில் அவ்வப்போது செய்யப்படும் அவ

சியமான ஏற்பாடுகளையும் அங்கீகரிக்க உரிமை வகிப்பார்கள். காங்கிரஸ் சார்பாகக் கார்யக்கமிட்டி நியமிக்கும் மற்றப் பிரதிநிதிகளுடன் சர்வகட்சி மகாநாட்டில் கலந்துகொள்ளக் காங்கிரஸ் காந்திஜியை நியமித்து அவருக்கு அதிகாரம் கொடுக்கிறது."

மறியல் விதி.

6. "அந்நியத்துணிப் பகிஷ்காரம், மதுபானங்கள், லாகிரி வஸ்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தி விற்பனைப் பகிஷ்காரம் ஆகியவினங்களில் இதுகாறும் ஏற்பட்டுள்ள பெரும் வெற்றியைக் கண்டு காங்கிரஸ் திருப்தியடைகின்றது. அரசாங்கத்துக்கும் காங்கிரசுக்கும் ஏற்பட்ட உடன்பாட்டின் நிபந்தனைகளுக்குட்பட்டு அமைதியான மறியலை நடத்தவேண்டுமென்றும் இது விஷயமாகத் தங்களது முயற்சிகளைத் தளர்த்தக்கூடாதென்றும் இக்காங்கிரஸ் தனது ஸ்தாபனங்களைக் கேட்டுக்கொள்ளுகின்றது."

வகுப்புக் கலவரம்.

7. "காசி, மிர்ஸாப்பூர், ஆக்ரா, கான்பூர் ஆகியவிடங்களிலும் ஏனையவிடங்களிலும்நடைபெற்றவகுப்புச்சச்சரவுகள்இந்தியாவின் சுதந்தர இயக்கத்திற்கு மிகத்தீங்கை விளைவிக்கக்கூடியனவென்று இக்காங்கிரஸ் அபிப்பிராயப்படுகின்றது. இம்மாதிரியான-கலவரங்களை உண்டாக்குவதற்கு அல்லது உண்டாக்கும்படித்தூண்டுவதற்குக் காரணமாக இருக்கின்றவர்களையும்இக்கலவரங்களை உண்டாக்கும் பொய் வதந்திகளைப் பரப்புவதற்குக் காரணமாக இருந்தவர்களையும் இக்காங்கிரஸ் பலமாகக் கண்டிக்கின்றது. சமாதானத்தைக் குலைக்கும் இவர்களது செயல்கள் பலமாகக் கண்டிக்கத் தகுந்தன என்று இக்காங்கிரஸ் அபிப்பிராயப்படுகின்றது. தீயின் மூலமோ அல்லது வேறுவழியிலோ சொத்துக்களுக்கு நேர்ந்த நஷ்டத்தைக் குறித்தும் பிரஜைகளும் முக்கியமாக ஸ்திரீகளும் குழந்தைகளும் கொல்லப்பட்டதைக் குறித்தும் இக்காங்கிரஸ் மிகத் துக்கிக்கின்றது. மிருகத்தனமான கொடுமைக் குள்ளாகி உயிருடனிருப்பவர்களிடமும் இறந்தவர்கள் குடும்பத்தாரிடமும் இக்காங்கிரஸ் தனதுமனப்பூர்வமான அனுதாபத்தைதெரிவித்துக் கொள்ளுகிறது." (தொடரும்.)

விகடத் துணுக்குகள்.

கணவன்:—உன் நடை சரி இல்லை என்று ஊரிலுள்ளோர் சொல்லுகின்றனரே. அதென்ன?

மனைவி:—தாங்கள் அடிக்கடி கண்டாரே—ழி என்று திட்டு கிறீர்களே, அந்த வாக்குப் பலித்துவிட்டது.

ஃ ஃ ஃ

தகப்பன்:—அடே கந்தா! உனக்கு வாங்கிக்கொடுத்த தின் பண்டம் ஒருவாரம் வருமே, ஒரே நாளில் தின்றுவிட்டாயே அப் படிச் செய்யலாமா?

மகன்:—ஒரு காரியத்தை நாளைக்கென்று வைக்காமல் உட னே செய்கிறவன் கெட்டிக்காரனென்று சொன்னீர்களே, அத ஞல் தான் தின்றேன்.

ஃ ஃ ஃ

ராமன்:—சோமா! உனக்கு ஈயத்தை வெள்ளியாக்கும் வழி தெரியுமாமே அது எப்படி?

சோமன்:—ஒருவருக்குஞ் சொல்லாதே அப்பா! இந்த வியா ழக்கிழமை இரவு ஒருமணக்கு ஈயத்தை வாங்கி சட்டியில் போட்டு உருக்கி ஒரு அச்சில் ஊற்றிவைத்துவிட்டுப் படுத்துக் கொள். மறுதினம் காலே வெள்ளியாகும்.

ஃ ஃ ஃ

பிரயாணி:—என்னையா பஸ் காரரே! நடுவழியில் சக்கரத்தில் காற்றுப்போய்விட்டதென்று காரை நிறுத்தி விட்டீரே. எத்தனை நாழி காத்துக்கொண்டிருக்கிறது?

பஸ்காரர்:—ஐயா பிரயாணியாரே! நீர் ஏறியது 'பஸ்'தானே காற்றும் பஸ் என்று போய்விட்டது. வண்டி கெட்டுவிட்டால் காத்திருக்கவேண்டுந்தானே. அதனல் தான் அதற்குக் கார் என்று பெயர் வந்தது.

காதலன்:—கண்ணே! நீ என் முன்போல் என்னிடம் அன் பாயில்லை.

காதலி:—ஐயா! உங்களுக்கு வருமானங் குறைந்துவிட்டது. எனக்கும் அன்பு குறைந்துவிட்டது.

காதலன்:—பணமிருந்தால் ஆசையுண்டாகுமோ?

காதலி:—உலகமே அதில் தானே மிதக்கிறது.

ஃ ஃ ஃ

கந்தன்:—நந்தா! தாசி வீட்டுப்பழக்கம் கொடிதா? காப்பிக் கிளப்புப் பழக்கங்கொடிதா?

நந்தன்:—தாசி வீட்டிற்குப் போகிறவன் நோய்வந்தால், பணங்குறைந்தால், கிழவனாய்விட்டால் நின்றுவிடுவான். காப்பிக் கிளப்புப் பழக்கம் சாகுமட்டும் விடாது. அதனால் தாசி வீட்டை விட காப்பிக்கிளப்புப் பழக்கங் கொடிது.

ஃ ஃ ஃ

வேணு:—ஓய் நவமணியாரே! க்ஷேமமா?

நவமணி:—சந்தாவுக்கு ஒப்புக்கொண்டவர்களும், விளம் பரந்தருகிறவர்களும் சொல் தவறாதபடி பணங் கட்டிவிட்டால் க்ஷேமந்தான்.

உபாத்தியாயர்:—பையன்களே! இவ்வகுப்பில் முழுமூடன் யார்? அப்பேர்ப்பட்டவர்கள் எழுந்து நில்லுங்கள் என்று கூறிக் கொண்டே உபாத்தியாயர் எழுந்துநின்றார்.

ஒரு மாணவன் (சிறிது நேரத்தின் பின்) எழுந்துநின்றான்.

உபாத்தியாயர்:—அவனைப்பார்த்து சந்தோஷம்! நீ முழு மூடன் என்று ஒப்புக்கொள்கிறாயா?

மாணவன்:—இல்லை சார்! முழுமூடன் எழுந்துநிற்கவேணு மென்று கூறித்தாங்கள் மட்டும் எழுந்து தனித்து நிற்பது கண்டு பரிதபித்துத் துணையாக நானும் எழுந்து நின்றேன்.

ஃ ஃ ஃ

உபாத்தியாயர்:—ஒரு மாணவனுடைய தந்தையைப்பார்த்து பையன் சிறுவனாயிருந்தாலும் கெட்டிக்காரன் தான். ஆனால்பொய் சொல்லுகிறான்.

மாணவன் தந்தை:—அப்படியா? அவன் தாயார் பொய் சொல்ல மாட்டாள். நானோ எப்போதும் வெளியூர்களில் அலைந் துகொண்டிருக்கிறேன். தங்களிடம் படிக்கும் பையனுக்கு வேறு யார் பொய்சொல்லப் படிப்பித்திருப்பார்கள்.

மணியொலி.

தூக்கிலிடப்பட்டனர்.

தேசவெறி காரணமாகச் சில பலாத்காரச் செயல்களைப் புரிந்த பகத்சிங் ராஜகுரு சுகதேவ் ஆகிய மூவரும் இம்மாதம் முந்திய தீர்ப்பின்படி தூக்கிலிடப்பட்டனர். அவர்களின் செய்கை தேசீய மஹாசபையின் ஆணைக் கீடுபட்ட எம்போன்றாரின் செய்கைக்கு முற்றிலும் மாறானதானபோதிலும் இவர்களுடைய கொள்கையும் தேசம் விடுதலையடையவேண்டுமென்ற ஒன்றையே குறித்தது. எனவே தேச வெறிகொண்டு பலாத்காரத்தில் இறங்கிய இம்மூவருடைய தூக்குத் தண்டனையையும் மாற்றி வேறு விதமாகத் தீர்ப்புச்சொல்லவேண்டுமென லக்ஷோபலக்ஷக் கணக்கான மக்கள் வேண்டிக்கொண்டும் சமாதானம் நாடி சமாதானச் செய்கை செயலிலுள்ள இச்சமயத்தில் அரசாங்கத்தார் அவர்களைத் தூக்கிலிட்டது பெரிதும் வருந்துவதற்குரியதொன்றாகும். எதையும் லக்ஷியம்செய்யாமல் தங்கள் கருத்தை இதில் அரசாங்கத்தார் முற்றுப்பெறச் செய்தனர். இத்தூக்கிற் கிறையான தேசவீரர்கள் மூவரின் ஆத்மாவும் சாந்தியடைய வேண்டுவதோடு அவர்களின் பெற்றோர்களுக்கும் வீரநண்பர்களுக்கும் இதன் மூலம் நமது அநுதாபத்தை அறிவித்துக்கொள்ளுகிறோம்.

தேசீய மஹாசபை.

இவ்வாண்டு கூடிய 45-வது தேசீய மஹாசபையைக் கராச்சியில் கூட்ட மிகச்சிறிய காலத்திற்குள் ஏற்பாடுசெய்யப்பட்ட போதிலும் மிகத் திறமையாகவும் ஜயத்துடனும் கூடிக் கலைந்த செய்தி யாவரையும் இன்புறச் செய்யுமென எதிர்பார்க்கிறோம். வீணாக நாட்கடத்தாமல் பல அரிய சிக்கலான பிரச்சினைகளை இரண்டு நாளில் தீர்த்துவைத்து ஒழுங்குடன் மஹாசபையை முடித்த பெருமை அதன் புதிய தலைவர் சர்தார்படேலுக்கும் அவருடன் ஒத்துழைத்த மஹாத்மா போன்ற சமரசவாதிகளு

க்குமே உடையது. வரவேற்புத்தலைவர், காங்கிரஸ் தலவர் முதலானவர்களின் உரைகள் மிகச் சுருக்கமாகவும் செயலில் கூடியதைத் தெரிவிக்கக்கூடியதாகவும் ஒற்றுமைக்கு வழிகாட்டியாகவும் விளங்கியது பெரிதும் போற்றத்தகுந்ததாகும். அதில் நிறைவெய்திய உயரிய 14 தீர்மானங்களையும் நமது 'நவமணி'யின் மற்றோர்பக்கத்தில் காணலாம்.

இந்து முஸ்லீம் பிணக்கு.

சமீபத்தில் கான்பூரில் நடந்த ஹிந்துமுஸ்லீம் பிணக்கு எவரையும் திடுக்கிடச் செய்திருக்கிறது. அதனால் ஏற்பட்ட கொலை, கொள்ளை முதலிய நஷ்டங்கள் மிகப் பெரிது. ஒரு தேசத்தில் பிறந்த இரு சகோதர சமூகத்தவர் மத்தியில் அடிக்கடி இவ்வாறான குழப்பமுண்டாகி நமது முன்னேற்றம் தடைப்படுவது பெரிய துக்ககரமான சம்பவமாகும். இதிலிருந்துதேசத்தைத் தப்புவித்து ஒற்றுமையை உண்டு செய்ய மஹாத்மாஜீயும் சில முஸ்லீம் தலைவர்களும் அரும்பாடுபட்டும் சரியான ஓர் முடிவு காணவில்லை. முதலில் இது மிக முக்கியமாக முடிவுசெய்யப்பட வேண்டிய விஷயமாகையால் இருசமூகத் தலைவர்களும் அடிக்கடி ஒன்று கூடி ஓர் ஒற்றுமையான முடிவுக்கு வரும்படி வேண்டிக்கொள்ளுகிறோம்.

மஹாத்மாஜீ.

ஜயிலிலிருந்து வெளிவந்தது முதல் மனிதசக்தியை மீறிய உழைப்பை சதா எடுத்துக்கொண்டதால் இப்பொழுது உடம்பு சிறிது அசௌகர்யமுற்றிருக்கிற தென்ற செய்தி எவரையும் கலக்கச்செய்யும். மஹாத்மாஜீ எப்பொழுதும் அவசியமான காரியங்களைச் செய்ய முயலும்பொழுது தனது சௌகர்யங்களைக் கவனிப்பதேயில்லை. ஆயினும் பொதுஜனங்களேனும் அவருடைய வேலையில் தாங்கள் பங்கெடுத்துக்கொண்டு இப்பொழுது அவர்களுக்குப் பூரண ஓய்வு கொடுக்கும்படி கேட்டுக்கொள்வதோடு மஹாத்மாஜீயின் திரேக சௌகர்யம் எப்பொதும் நன்றாக இருக்கும்படி ஒவ்வோர்வரும் கடவுளிடம் முறையிடவும் வேண்டுகிறோம்.

நாற்றிசை நடப்பு.

உள்ளூர்ச் செய்தி.

அநுதாபக்கூட்டம். இம்மாதம் மத்தியில் பகத்சிங், ராஜகுரு சுகவேவ் முதலியவர்கள் தூக்கிலிடப்பட்டு உயிர்நீத்ததற்காக ஓர் அநுதாபக்கூட்டம் திரு. எம். சுப்பிரமணியஞ் செட்டியாரவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் அவர்களின் தேசபக்தியைப் பாராட்டி திருவாளர்களான கோ. வெங்கிட்டராமய்யரவர்கள் திண்டுக்கல் தம்புச்சாமி அவர்கள் ச. பெரி. இராமசாமி அவர்கள் சி. ராம. இராமனுதன் அவர்கள் முதலானோர் பேசினர்.: ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

மாணவர் சங்கம்.

ஹைஸ்கூல் மாணவர்சங்க இரண்டாவது மூன்ருவது வருட விழா ஜில்லாக் கல்வி அதிகாரி திரு. தாமோதர முதலியாரவர்கள் தலைமையில் ஹைஸ்கூல் ஹாலில் நடைபெற்றது. அவ்வமயம் பல அறிஞர்களும் பெற்ரோர் கடமையைப் பற்றிப் பேசினர் ஆரம்பத்தில் ஓர் சிற்றுண்டியும் வழங்கப்பட்டது.

பிரயாணம் நிறுத்தப்பட்டது.

மகாத்மா காந்திக்கு சிறிது சுரமும் குளிரும் வந்திருக்கிறதாம். அவரை டாக்டர் அன்சாரி பார்வையிட்டு முழு ஓய்வு எடுத்துக் கொள்ளக் கூறியுள்ளார். எனவே, மகாத்மாவைப் பார்க்க எவரும் அனுமதிக்கப்படவில்லை. பாஞ்சாலத்திற்குச் செல்வதாக வைத்திருந்த அவரது பிரயாணமும் ரத்துச்செய்யப்பட்டது.

"செட்டி நாடு"

தஞ்சையிலிருந்து வெளிவந்த 'செட்டிநாடு' எனும் தமிழ்வாரப் பத்திரிகை, சித்திரை மாசம் முதல் வாரத்திலிருந்து காரைக்குடியி

விருந்து வெளியாகும். அப்பொழுதே அதன் காரியாலயத் திறப்புவிழாவும் நடைபெறும் என்று தெரிகிறது.

ராஜப்பிரதிநிதிகள் சந்திப்பு.

புதிய வைசிராய் வில்லிங்டன் பிரபு இந்தியாவுக்குப் புறப்பட்டு விட்டார். எப்ரல் 17-உ காலை பம்பாய் வந்துசேர்ந்து, 18-உ மாலை பம்பாய் பிரதம நீதிபதி முன்னிலையில் ராஜவிசுவாசப் பிரமாணம் செய்வார். தற்பொழுதைய வைசிராய் இர்வின் பிரபு 18-உ காலை இங்கிலாந்துக்குப் பிரயாணமாவார். புதிய ராஜாப்பிரதிநிதி, லார்டு இர்வினைக் கண்டு அரசாங்க மாளிகையில் சிறிதுநேரம் அவருடன் பேசிக்கொண்டிருக்க இப்பொழுது செய்திருக்கும் ஏற்பாட்டால் வசதி ஏற்பட்டிருக்கிறது. புதிய ராஜப்பிரதிநிதியும் பழைய ராஜப்பிரதிநிதியும் ஒருவரை யொருவர் சந்தித்துக்கொள்ளக்கூடா தென்று ஒரு சம்பிரதாயம் ஏற்பட்டிருக்கிறது. எதற்காக இவ்விதம் ஏற்படுத்தப் பட்டதென்று தெரியவில்லை. ஆனால் இது இதுவரை பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது. அதற்கு மாறாக இப்பொழுது ஏற்பாடு செய்திருப்பதிலிருந்து இர்வின் பிரபுவைக் கண்டு அவரிடம் பல விஷயங்களைத் தெரிந்துகொள்ள வில்லிங்டன் பிரபு ஆவலுடையவராக இருக்கிறாரென்று தெரிகிறது. இந்த ஏர்பாட்டை பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இர்வின் பிரபுவை வழியனுப்ப மகாத்மா காந்தி பம்பாய்க்கு வருவார். வில்லிங்டன் பிரபுவும் மகாத்மாகாந்தியும் கலந்துபேச ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

வட்டமேஜைக்கு அழைப்பு.

வட்டமேஜைமகாநாட்டிற்கு விஜயஞ்செய்ய வைசிராய் பண்டித மதனமோகன மாளவியாஜீக்கு அழைப்புக்கடிதம் விடுத்துள்ளார். ஆனால் காங்கிரஸ் ஹோதாவில் செல்வதா சொந்த ஹோதாவில் செல்வதாவென பண்டிதரவர்கள் யோசனையிலிருந்துவருகிறார்.

ஜமேதார் ராஜிநாமா.

சர்தார் பகத்சிங் தூக்கிலிடப்பெற்றதை ஆட்சேபித்து சென்னை மலையாள விசேஷ போலீசைச் சேர்ந்த ஜமேதார் குமரநாயர் தமது உத்தியோகத்தை ராஜீநாமாச்செய்துவிட்டார். அதனால் மலையாள போலீஸாரிடையே பெரும் பரபரப்பேற்பட்டிருக்கிறது.

நமது "நவமணி"

சென்ற தையிலிருந்து நமது 'நவமணி'க்கு இரண்டு டாவதாண்டாகும். புதிய ஆண்டில் உயர்ந்த பல அறிஞர்களின் கட்டுரை கொண்டும் பல்வேறு வேடிக்கைப் பகுதிகள் தாங்கியும் பெண்கள் முன்னேற்றத்திற்கும் பெண் சமூக சீர்திருத்தத்திற்கும் வேண்டிய நூதன ஆராய்ச்சிகள் திகழப்பெற்றும் அதிக பக்கங்களோடும் வெளிவருகிறது. உடனே நீங்கள் ஒவ்வொருவரும் சந்தாதாரராகச் சேருங்கள்.

விளம்பரக் காரர்களுக்கு.

இந்தியா, பர்மா, மலேயா முதலிய இடங்களில் இப்பொழுது நமது பிரதிநிதிகள் வேலைசெய்ததின் காரணமாக நமது பத்திரிகையின் சந்தாதார் தொகை அதிகமாகிவருகிறதென்பது நாம் சொல்லாமலே அறிந்துகொள்ளக்கூடியது. இப்பொழுதே விளம்பரம் ஒப்பந்தஞ் செய்துகொண்டால் குறைந்த ரேட்டில் செய்துகொள்ளலாம். எனவே, ஒவ்வோர் விளம்பரக்காரர்களும் தங்கள் விளம்பரங்களை நமது 'நவமணி'யில் வெளிவரச்செய்து நல்ல பலன் பெறுவார்களென எதிர்பார்க்கிறோம்.

விளம்பர விகிதம்.

முழுப்பக்கம்	ரூபாய் 7—0—0
அரைப்பக்கம்	ரூபாய் 4—0—0
அட்டை முழுப்பக்கம்	ரூபாய் 10—0—0
அரைப்பக்கம்	ரூபாய் 6—0—0

நீடித்த விளம்பரங்களுக்கு எழுதித்தெரிந்து கொள்ளவும்

மானேஜர்
"நவமணி" பத்திரிகாலயம்
பள்ளத்தூர். ராமனாதபுரஞ் ஜில்லா.

Regd. No M. 2646.

உ

சுத்தக் கதர்! சுத்தக் கதர்!!

பள்ளத்தூர் வாசிகள் நீண்ட நாளாக கதர் கிடைக்கவில்லை என்ற குறை நீங்கி விட்டது. சுத்தக்கதர், ராஜ பாளையம் நைஸ் கதர் வகைகள் யாவும் எங்களிடம் குறைந்த விலையில் கிடைக்கும்.

மானேஜர்,

நவமணி பத்திரிகாலயம்,

பள்ளத்தூர்.

உயர்ந்த வேலை! குறைந்த கூலி!!

நாங்கள் எல்லாவித எலக்டிரிக் வயரிங் கண்டிராக்டுகளையும் ஒப்புக்கொண்டு உயர்ந்த முறையில் குறைந்த கூலியில் கடந்த பல ஆண்டுகளாக வேலைசெய்து வருகிறோம். புதிய பல வேலைகளையும்ஒப்புக்கொண்டு நன்றாகச் செய்துதரத் தயாராக வுள்ளோம். ஓர் முறை ஆர்டர் கொடுத்து எங்கள் திறமையைப் பாருங்கள்.

T. R. ரெங்கசாமி,

பள்ளத்தூர்.

Printed & Published by S. RM. Ramanatha Mudaliar, at Vedhambal Press, Pallatur, (Ramnad Dt.)